# தமிழ்

## அகரம்

### இரண்டாம் பருவம்




தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை-25

www.tamilvu.org

# தமிழ்

## அகரம்

### இரண்டாம் பருவம்

தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை-600025.

**தமிழ்நாடு அரசு**

**முதல்பதிப்பு - 2025**

**விலை: ரூ. 250.00**

**பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்**

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**நூல் அச்சாக்கம்**

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**

www.textbooksonline.tn.nic.in

| ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும்<br>(18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) |
|---|
| குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>CHILD LINE 1098 NIGHT & DAY |
| மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?<br>பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?<br>தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?<br>அழையுங்கள் 14417<br>உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்<br>14417 கல்வித் தகவல் மையம் |

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

- 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்

## தமிழ்த்தாய் வாழ்த்து - பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 17 | மரபு விளையாட்டுகள் | | |
| | இலக்கணம் | | |
| | இன எழுத்துகள் | | 1 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | விளையாடு! விளையாடு! | தமிழர் விளையாட்டு | |
| 18 | கிழமைகள் | | |
| | இலக்கணம் | | |
| | வினா எழுத்துகள் | | 23 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை | இந்த நாள் இனிய நாள் | |
| 19 | தமிழ் மாதங்கள் | | |
| | இலக்கணம் | | |
| | திணை | | 38 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | மழை | பருவத்தே பயிர் செய் | |
| 20 | திசைகள் | | |
| | மீள்பார்வை பயிற்சிகள் | | 56 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | திசை | திசைகள் அறிவோம் | |
| 21 | விழாக்கள் | | |
| | இலக்கணம் | | |
| | எண்ணுப்பெயர்கள் | | 70 |
| | பாடி மகிழ்வோம் | கேட்டல் கருத்தறிதல் | |
| | தமிழர் திருநாள் | பொங்கல் திருநாள் | |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 22 | தமிழர் உணவுகள்<br>**இலக்கணம்**<br>சுட்டு எழுத்துகள்<br>**பாடி மகிழ்வோம்**<br>உடல் நலம் பேணல் | **கேட்டல் கருத்தறிதல்**<br>பயிர்ப் பாதுகாப்பு | 86 |
| 23 | பூக்கள்<br>**இலக்கணம்**<br>ஒருசொல் பலபொருள்<br>**பாடி மகிழ்வோம்**<br>மலர்கள் | **கேட்டல் கருத்தறிதல்**<br>குறிஞ்சி மலர் | 100 |
| 24 | உடல் உறுப்புகள்<br>மீள்பார்வை பயிற்சிகள்<br>**பாடி மகிழ்வோம்**<br>அன்னையை வேண்டுதல் | **கேட்டல் கருத்தறிதல்**<br>ஆமையின் அறிவுரை | 116 |
| 25 | பழங்கள்<br>மீள்பார்வை பயிற்சிகள்<br>**இலக்கணம்**<br>பலசொல் ஒரு பொருள்<br>**பாடி மகிழ்வோம்**<br>சொல் ஒன்று பொருள் இரண்டு | **கேட்டல் கருத்தறிதல்**<br>முக்கனி சுவைப்போம் | 137 |
| 26 | காய்கறிகள்<br>**இலக்கணம்**<br>காலம்<br>**பாடி மகிழ்வோம்**<br>மரம் வளர்ப்போம் | **கேட்டல் கருத்தறிதல்**<br>முருங்கை மரம் | 155 |

| பாடம் | பாடப்பொருள் | | பக்க எண் |
|---|---|---|---|
| 27 | விலங்குகள்<br>இலக்கணம்<br>எதிர்ச்சொற்கள்<br>பாடி மகிழ்வோம்<br>முரசு | கேட்டல் கருத்தறிதல்<br>வரையாடு (மலை ஆடு) | 172 |
| 28 | நிறங்கள்<br>மீள்பார்வை பயிற்சிகள்<br>பாடி மகிழ்வோம்<br>வீடு எங்கே? | கேட்டல் கருத்தறிதல்<br>என்ன வண்ணம் தீட்டலாம்? | 188 |
| 29 | பறவைகள்<br>இலக்கணம்<br>வேற்றுமை உருபுகள்<br>பாடி மகிழ்வோம்<br>ஓடி வா! | கேட்டல் கருத்தறிதல்<br>கழுகு | 206 |
| 30 | தாவரங்கள்<br>இலக்கணம்<br>இரண்டு, மூன்று சொல் கொண்ட தொடர்கள்<br>பாடி மகிழ்வோம்<br>காடு | கேட்டல் கருத்தறிதல்<br>பனைமரம் | 224 |
| 31 | பாடப்பொருள்<br>மீள் பார்வை பயிற்சிகள் | | 243 |


பாடம்
17

## 17.1 பேசுவோம்



### சொற்கள்

கண்ணாமூச்சி
கிட்டிப்புள்
பம்பரம்
கபடி
பல்லாங்குழி

## 17.2 அறிவோம்

### மரபு விளையாட்டுகள்



ஓடிப் பிடித்தல்



கோலிக் குண்டு



பச்சைக் குதிரை



பாண்டி ஆட்டம்



கயிறு இழுத்தல்



தாயம்



உறி அடித்தல்



ஐந்தாங்கல்



கயிறு தாண்டுதல்



ஆடுபுலி ஆட்டம்

## 17.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| ஓடிப் பிடித்தல் | தாயம் |
| கோலிக் குண்டு | உறி அடித்தல் |
| பச்சைக் குதிரை | ஐந்தாங்கல் |
| பாண்டி ஆட்டம் | கயிறு தாண்டுதல் |
| கயிறு இழுத்தல் | ஆடுபுலி ஆட்டம் |

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| சதுரங்கம் | கைப்பந்து |
| மட்டைப்பந்து | ஈட்டி எறிதல் |
| நீளம் தாண்டுதல் | இறகுப்பந்து |

## 17.4 சொல்லிப் பழகுவோம்



சிலம்பம் சுற்றலாம்



கோலிக்குண்டு அடிக்கலாம்



தாயம் உருட்டலாம்



பச்சைக்குதிரை தாண்டலாம்

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்.



○ ஐந்தாங்கல்



○ ஆடுபுலி ஆட்டம்



○ பல்லாங்குழி



○ உறி அடித்தல்



○ கயிறு தாண்டுதல்

(ஆ) வட்டமிடுவோம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கி | க | ச | பா | ண் | டி | ம | ப |
| ட் | ம் | த | ட | ன் | அ | ட் | ம் |
| டி | சோ | ப | னா | ய் | ரெ | க | ப |
| ப் | கீ | மா | ர | நா | ழ் | டி | ர |
| பு | போ | லி | நீ | ம் | மி | ப | ம் |
| ள் | தா | ய | ம் | ப | டி | க | ல் |
| க | ண் | ணா | மூ | ச் | சி | ல | ச |
| ல் | ட | பா | க் | ரி | கி | சி | தி |

பாண்டி | பம்பரம் | கபடி

கண்ணாமூச்சி | கிட்டிப்புள் | தாயம்

(இ) எழுதுவோம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | | டி | | | | | | | ப, ர, ல |
| ப | ம் | ப | | ம் | | | | | ர, ல, ன |
| ப | ல் | லா | ங் | | ழி | | | | து, கு, மு |
| க | யி | று | | ண் | டு | த | ல் | | பா, தா, யா |
| க | | ணா | மூ | ச் | சி | | | | ந், ப், ண் |
| பா | ண் | | ஆ | ட் | ட | ம் | | | பி, டி, யி |
| | ய | ம் | | | | | | | பா, வா, தா |

## 17.5 பாடி மகிழ்வோம்

### விளையாடு! விளையாடு!




விளையாடு விளையாடு
விரும்பி நீயும் விளையாடு
ஆடிப்பாடி விளையாடு
ஆசையாக விளையாடு
கபடி கபடி விளையாடு




கண்ணாமூச்சி விளையாடு
ஓடிப்பிடித்து விளையாடு
ஒளிந்து பிடித்து விளையாடு
பாண்டி ஆட்டம் விளையாடு
பம்பரம் சுற்றி விளையாடு




தாயம் உருட்டி விளையாடு
தாவிப் பிடித்து விளையாடு
கயிறு தாண்டி விளையாடு
கம்பு சுழற்றி விளையாடு
பச்சைக்குதிரை விளையாடு




பல்லாங்குழி விளையாடு
விளையாடு விளையாடு
விரும்பி நீயும் விளையாடு

## 17.6 கேட்டல் கருத்தறிதல்

### தமிழர் விளையாட்டு




தாத்தா, இவர்கள் என்ன செய்கிறார்கள்?
கவின், இவர்கள் ஆடுபுலி ஆட்டம் ஆடுகிறார்கள்.
ஆடுபுலி ஆட்டமா? அது என்ன விளையாட்டு?
அறிவுக்கு வேலை தரும் எளிய விளையாட்டு. இது, நமது மரபு விளையாட்டு.

அப்படியா, அதுசரி, இதற்கு ஏன் ஆடுபுலி ஆட்டம் என்று பெயர் வந்தது?



இதோ, இவர்கள் கட்டம் போட்டு, அதில் சில காய்களை வைத்து விளையாடுகிறார்கள், அல்லவா! அந்தக் காய்களை ஆடுகளாகவும் புலிகளாகவும் எண்ணிக்கொண்டு விளையாடுவார்கள்.



ஓ! அப்படியானால், இந்த ஆட்டத்தின் முடிவில் புலிகள்தாமே வெற்றி பெறும்.



இல்லை, கவின். ஆடுகளை வெட்டினால் புலிகள் வெற்றி பெறும். புலிகளை நகரவிடாமல் செய்தால், ஆடுகள் வெற்றி பெறும்.



அப்படியென்றால், இந்த ஆட்டத்தில் எத்தனை புலிகளும் எத்தனை ஆடுகளும் உள்ளன?



இதோ, பார்த்தாயா? மூன்று பெரிய காய்கள். அவைதாம் புலிகள். இங்கு, பதினைந்து சிறிய காய்களும் இருக்கின்றன. இவைதாம் ஆடுகள்.



தாத்தா, எனக்கும் ஆடவேண்டும்போல் உள்ளது. நானும் இவர்களுடன் சேர்ந்து ஆடட்டுமா?



கவின், இந்த விளையாட்டை விளையாட, இருவர் போதும். வா, இதே விளையாட்டை நாம் இருவரும் வீட்டிற்குச் சென்று விளையாடுவோம்.



### தெரியுமா?

1. தமிழ்நாட்டின் மாநில விளையாட்டு – கபடி
2. இந்தியாவின் தேசிய விளையாட்டு - ஹாக்கி

## 17.7 தெரிந்து கொள்வோம்

### மரபு விளையாட்டுகள்



ஆடுபுலி ஆட்டம்



கிட்டிப்புள்



பச்சைக்குதிரை

### நவீன விளையாட்டுகள்



சதுரங்கம்



மட்டைப்பந்து



நீளம் தாண்டுதல்

## 17.8 அறிவோம்

**இன எழுத்துகள் (ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற)**



செங்கல்



சிங்கம்

சங்கம் தங்கம் மங்களம் பொங்கல்



ஊஞ்சல்



மஞ்சள்

நெஞ்சம் அஞ்சல் தஞ்சம் கிளிஞ்சல்



அண்டம்



சுண்டல்

பண்டம் மண்டபம் கண்டம் மண்டலம்



தந்தம்



பந்தல்

சிந்தனை சந்தனம் மருந்து குழந்தை



பம்பரம்



கம்பம்

குடும்பம் சிலம்பம் அரும்பு உடம்பு




மன்றம்



குன்று

தென்றல் கொன்றை கன்று நன்று

## 17.9 திரும்பப் படிப்போம்

| | | |
|---|---|---|
| செங்கல் | அண்டம் | பம்பரம் |
| சிங்கம் | சுண்டல் | கம்பம் |
| சங்கம் | பண்டம் | குடும்பம் |
| தங்கம் | மண்டபம் | சிலம்பம் |
| மங்களம் | கண்டம் | அரும்பு |
| பொங்கல் | மண்டலம் | உடம்பு |

| | | |
|---|---|---|
| ஊஞ்சல் | தந்தம் | மன்றம் |
| மஞ்சள் | பந்தல் | குன்று |
| நெஞ்சம் | சிந்தனை | தென்றல் |
| அஞ்சல் | சந்தனம் | கொன்றை |
| தஞ்சம் | மருந்து | கன்று |
| கிளிஞ்சல் | குழந்தை | நன்று |

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| பங்கு | நன்றி |
| பஞ்சு | சான்றோர் |
| தம்பி | பாம்பு |
| வண்டு | பந்து |

## 17.10 சொல்லிப் பழகுவோம்



சுண்டலைத் தின்



சிங்கத்தைப் பார்



பம்பரத்தைத் சுற்று



மஞ்சளை அரை

## பயிற்சிகள்

### (அ) நிரப்புவோம்

1. த - கம் - (ந் / ங்)
2. குடு – பம் - (ம் / ஞ்)
3. ம- டபம் - (ண் / ன்)
4. தெ – றல் - (ண் / ன்)
5. ச - தனம் - (ந் / ஞ்)
6. நெ – சம் - (ங் / ஞ்)

### (ஆ) முறைப்படுத்தி எழுதுவோம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ம் | க | ப | ம் | க | ம் | ப | ம் |
| 2. | ச | ஞ் | ம | ள் | | | | |
| 3. | ட | சு | ல் | ண் | | | | |
| 4. | ந் | த | ம் | த | | | | |
| 5. | சி | க | ம் | ங் | | | | |
| 6. | ன் | ம | ற | ம் | | | | |

## 17.11 செயல்திட்டம்

புலிகள்



ஆடுகள்





ஆடுபுலி ஆட்டம், நீங்கள் விளையாடும்
எந்த விளையாட்டை நினைவுபடுத்துகிறது?

## 17.12 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. கயிறு தாண்டுதல் | - | Skipping |
| 2. சதுரங்கம் | - | Chess |
| 3. சுண்டாட்டம் | - | Carrom |
| 4. மட்டைப்பந்து | - | Cricket |
| 5. உயரம் தாண்டுதல் | - | High jump |
| 6. நீளம் தாண்டுதல் | - | Long jump |
| 7. இறகுப்பந்து | - | Shuttlecock |
| 8. கால்பந்து | - | Foot ball |
| 9. ஈட்டி எறிதல் | - | Javelin throw |
| 10. கைப்பந்து | - | Volley ball |



# பாடம் 18

## 18.1 பேசுவோம்




### சொற்கள்

| | |
|---|---|
| ஞாயிறு | வியாழன் |
| திங்கள் | வெள்ளி |
| செவ்வாய் | சனி |
| புதன் | |

## 18.2 அறிவோம்

### கிழமைகள்

ஞாயிறு - Sunday

திங்கள் - Monday

செவ்வாய் - Tuesday

புதன் - Wednesday

வியாழன் - Thursday

வெள்ளி - Friday

சனி - Saturday

## 18.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| ஞாயிறு | Sunday |
| திங்கள் | Monday |
| செவ்வாய் | Tuesday |
| புதன் | Wednesday |
| வியாழன் | Thursday |
| வெள்ளி | Friday |
| சனி | Saturday |

## 18.4 சொல்லிப் பழகுவோம்



ஞாயிறு என்பது சூரியன்



திங்கள் என்பது சந்திரன்

## பயிற்சிகள்

(அ) விடுபட்ட எழுத்தை இணைப்போம்.

| | |
|---|---|
| ஞா ___ று ○ | ○ ங் |
| தி ___ கள் ○ | ○ னி |
| செவ் ___ ய் ○ | ○ ளி |
| பு ___ ன் ○ | ○ யி |
| வியா ___ ன் ○ | ○ வா |
| வெள் ___ ○ | ○ த |
| ச___ ○ | ○ ழ |

(ஆ) கிழமைகளை வரிசையாய் எழுதுவோம்.

திங்கள்

வெள்ளி

புதன்

வியாழன்

சனி

ஞாயிறு

செவ்வாய்

1. ____________________

2. ____________________

3. ____________________

4. ____________________

5. ____________________

6 ____________________

7. ____________________

## 18.5 பாடி மகிழ்வோம்

### ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை





ஞாயிற்றுக் கிழமை பிறந்த பிள்ளை
நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்.

திங்கட் கிழமை பிறந்த பிள்ளை
தினமும் உண்மை பேசிடுமாம்.

செவ்வாய்க் கிழமை பிறந்த பிள்ளை
செய்வதை ஒழுங்காய்ச் செய்திடுமாம்.





புதன் கிழமை பிறந்த பிள்ளை
பெற்றோர் சொற்படி நடந்திடுமாம்.

வியாழக் கிழமை பிறந்த பிள்ளை
மிகவும் பொறுமை காட்டிடுமாம்.

வெள்ளிக் கிழமை பிறந்த பிள்ளை
வேண்டும் உதவிகள் செய்திடுமாம்.

சனிக் கிழமை பிறந்த பிள்ளை
சாந்தமாக இருந்திடுமாம்

அழ. வள்ளியப்பா





## 18.6 கேட்டல் கருத்தறிதல்

### இந்த நாள் இனிய நாள்









அமுதனுக்குத் தன் திறமைகளை வளர்த்துக் கொள்ள ஆசை. எனவே, நாள்தோறும் ஏதேனும் ஒரு சிறப்பு வகுப்பிற்குச் செல்வான். திங்கள் நீச்சல் பயிற்சி, செவ்வாய் கணினி வகுப்பு, புதன் இசை வகுப்பு, வியாழன் நடன வகுப்பு, வெள்ளி சிலம்ப வகுப்பு, சனி ஓவிய வகுப்பு என நாள்தோறும் ஒரு வகுப்பிற்குச் செல்வான். ஞாயிறு அன்று நண்பர்களுடன் விளையாடச் செல்வான். இவ்வாறு அமுதன் ஒவ்வொரு நாளும் தன் திறமைகளை வளர்த்துக் கொள்கிறான்.

## 18.7 அறிவோம்

### வினா எழுத்துகள்

ஆ எ ஏ ஓ யா



கவின் எப்படி இருக்கிறாய்?



பாலன் என்ன செய்கிறான்?



தாஜ்மஹாலைக் கட்டியவர் யார்?



கயல் ஏன் ஓடுகிறாள்?



இது பாம்பா? கயிறா?



எந்தப் பழம் புளிக்கும்?



எது உயரமானது?



அங்குத் தெரிவது சிறுத்தையோ?

## 18.8 திரும்பப் படிப்போம்

கவின் எப்படி இருக்கிறாய்?

பாலன் என்ன செய்கிறான்?

தாஜ்மஹாலைக் கட்டியவர் யார்?

கயல் ஏன் ஓடுகிறாள்?

இது பாம்பா? கயிறா?

எந்தப் பழம் புளிக்கும்?

எது உயரமானது?

அங்குத் தெரிவது சிறுத்தையோ?

### புதிய சொற்கள்

எங்கு?

எவை?

எதற்கு?

எவ்வாறு?

எத்தனை?

யாது?

யாவை?

### தெரிந்து கொள்வோம்

**வினா எழுத்துகள்**



## 18.9 சொல்லிப் பழகுவோம்



கூட்டில் இருப்பது காகமோ?
குயிலோ?



பானையை உடைத்தது யார்?



எத்தனை பழங்கள் உள்ளன?




நூலகம் செல்லலாமா?

## பயிற்சிகள்

(அ) வினா எழுத்துகளை வட்டமிடுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | எ | இ | யா | ஒ | ப |
| ஆ | க | த | ச | வ | ஓ |
| தி | டி | எ | ப் | ஆ | டி |
| யா | ரு | க் | கு | ன் | ஏ |
| அ | வ | ன் | ஏ | த | ற் |
| ஓ | ர் | கு | ங் | எ | ஒ |

(ஆ) சரியானதைத் தேர்ந்தெடுப்போம்.

1. கயல் ------ ஓடுகிறாள்?

(அ) என்ன (ஆ) யார் (இ) ஏன் (ஈ) எந்த

2. தாஜ்மஹாலைக் கட்டியவர் ------

(அ) என்ன? (ஆ) யார்? (இ) எப்படி? (ஈ) எந்த?

3. இது பாம்பா? கயிறா?-இத்தொடரில் வரும் வினா எழுத்து எது?

(அ) எ (ஆ) ஆ (இ) ஓ (ஈ) ஏ

4. அங்குத் தெரிவது சிறுத்தையோ-இத்தொடரில் வரும் வினா எழுத்து எது?

(அ) ய (ஆ) ஆ (இ) ஓ (ஈ) ஏ

## 18.10 செயல்திட்டம்

ஒரு வாரத்திற்கான நமது பணிகளைத் திட்டமிடுவோம்.

| நாள் | செயல்பாடு |
|---|---|
| ஞாயிறு | |
| திங்கள் | |
| செவ்வாய் | |
| புதன் | |
| வியாழன் | |
| வெள்ளி | |
| சனி | |

## 18.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. நீச்சல் | - | Swimming |
| 2. ஓவியம் | - | Painting |
| 3. கணினி | - | Computer |
| 4. பள்ளி | - | School |
| 5. வாரம் | - | Week |
| 6. பாடல் | - | Song |
| 7. இசை | - | Music |
| 8. நடனம் | - | Dance |
| 9. பணி | - | Work |
| 10. விளையாட்டு | - | Play |
| 11. நேற்று | - | Yesterday |
| 12. இன்று | - | Today |
| 13. நாளை | - | Tomorrow |
| 14. காலை | - | Morning |
| 15. மாலை | - | Evening |
| 16. எப்போது | - | When |
| 17. என்ன | - | What |
| 18. எங்கே | - | Where |
| 19. எப்படி | - | How |
| 20. எது | - | Which |
| 21. யார் | - | Who |
| 22. யாருடைய | - | Whose |
| 23. ஏன் | - | Why |

பாடம் 19



## 19.1 பேசுவோம்




சித்திரை, வைகாசி




ஆனி, ஆடி




ஆவணி, புரட்டாசி




ஐப்பசி, கார்த்திகை




மார்கழி, தை




மாசி, பங்குனி

### சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | ஆடி | ஐப்பசி | தை |
| வைகாசி | ஆவணி | கார்த்திகை | மாசி |
| ஆனி | புரட்டாசி | மார்கழி | பங்குனி |

## 19.2 அறிவோம்




| தமிழ் மாதம் | ஆங்கில மாதம் | |
|---|---|---|
| சித்திரை | APRIL | MAY |
| வைகாசி | MAY | JUNE |
| ஆனி | JUNE | JULY |
| ஆடி | JULY | AUGUST |
| ஆவணி | AUGUST | SEPTEMBER |
| புரட்டாசி | SEPTEMBER | OCTOBER |
| ஐப்பசி | OCTOBER | NOVEMBER |
| கார்த்திகை | NOVEMBER | DECEMBER |
| மார்கழி | DECEMBER | JANUARY |
| தை | JANUARY | FEBRUARY |
| மாசி | FEBRUARY | MARCH |
| பங்குனி | MARCH | APRIL |

## 19.3 திரும்பப் படிப்போம்

சித்திரை

வைகாசி

ஆனி

ஆடி

ஆவணி

புரட்டாசி

ஐப்பசி

கார்த்திகை

மார்கழி

தை

மாசி

பங்குனி



## 19.4 சொல்லிப் பழகுவோம்



சித்திரையில் வெயில் காயும்



ஆடியில் காற்று வீசும்



மார்கழியில் குளிர் வாட்டும்



மாசியில் பனி பெய்யும்

## பயிற்சிகள்

(அ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்.

கா ___ த்தி ___

வைகாசி

ஆ ___

மார்க ___

___ ங்குனி

ஆ ___ ணி

சித்தி ___

ஐ ___ பசி

மா ___

புரட் ___ சி

___ னி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கா | டா | ழி | ப் | சி | ர் |
| வ | ரை | டி | கை | ஆ | ப |

(ஆ) கட்டங்களை நிரப்புவோம்.

| தமிழ் மாதம் | | ஆங்கில மாதம் | |
|---|---|---|---|
| | ◀ | MAY | JUNE |
| | ◀ | JUNE | JULY |
| | ◀ | JULY | AUGUST |
| | ◀ | AUGUST | SEPTEMBER |
| | ◀ | SEPTEMBER | OCTOBER |
| | ◀ | OCTOBER | NOVEMBER |

## 19.5 பாடி மகிழ்வோம்

### மழை

மின்னல் மின்னி இடித்ததே!
வீட்டில் சாரல் அடித்ததே!
சன்னல் வழியாய் நீர் புகுந்து
தரையில் பாயை நனைத்ததே!

இருண்ட வானம் திறந்ததே!
எழுந்த கதிரும் விரிந்ததே!
இரண்டு கரையும் வெள்ளம் புரண்டே
ஏரி வந்து புகுந்ததே!

-வாணிதாசன்



## 19.6 கேட்டல் கருத்தறிதல்

### பருவத்தே பயிர் செய்



'ஆடிப் பட்டம் தேடி விதை' என்பார்கள். அதற்கேற்ப, முகிலன் ஆடி மாதத்தில் நெல்மணிகளை வயலில் விதைத்தான். ஆவணி, புரட்டாசி மாதங்களில் களைகளை நீக்கி நெற்பயிர்கள் செழித்து வளரச்செய்தான். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மழை வெள்ளத்தில் பயிர்கள் மூழ்கிவிடாமல் பாதுகாத்தான். மார்கழி மாதம் பயிர்களை அறுவடை செய்தான். தை மாதம் புத்தரிசி எடுத்துப் புதுப்பானையில் பொங்கலிட்டு மகிழ்ந்தான்.

## பயிற்சி

பொருத்துவோம்.



○ ○ மார்கழி



○ ○ தை



○ ○ ஆடி



○ ○ ஐப்பசி



○ ○ புரட்டாசி

## 19.7 அறிவோம்

### திணை



குமரன் ஆடினான்



பாலா ஓடினான்



தமிழினி பாடினாள்



கவிதா படித்தாள்



குழந்தைகள் விளையாடினர்



வீரர்கள் நின்றனர்



யானை வந்தது



தும்பி பறந்தது



மீன்கள் நீந்தின



எறும்புகள் ஊர்ந்தன

## 19.8 திரும்பப் படிப்போம்

குமரன் ஆடினான்

பாலா ஓடினான்

தமிழினி பாடினாள்

கவிதா படித்தாள்

குழந்தைகள் விளையாடினர்

வீரர்கள் நின்றனர்

யானை வந்தது

தும்பி பறந்தது

மீன்கள் நீந்தின

எறும்புகள் ஊர்ந்தன

### புதிய சொற்கள்

உயர்திணை

அஃறிணை

ஆண்பால்

பெண்பால்

பலர்பால்

ஒன்றன்பால்

பலவின்பால்

## 19.9 சொல்லிப் பழகுவோம்



கண்ணன் எழுதினான்



இனியா பாடினாள்



மக்கள் திரண்டனர்



குயில் கூவியது



நாய்கள் குரைத்தன



பூக்கள் மலர்ந்தன

## தெரிந்து கொள்வோம்

- திணை
  - உயர்திணை
    - ஆண்பால்

      
    - பெண்பால்

      
    - பலர்பால்

      
  - அஃறிணை
    - ஒன்றன்பால்

      
    - பலவின்பால்

      

## பயிற்சிகள்

(அ) பெயர்களை எழுதுவோம்.

1. ______________________ ஊஞ்சல் ஆடினாள்.

2. ______________________ பம்பரம் விளையாடினான்.

3. ______________________ பள்ளிக்குச் சென்றனர்.

4. ______________________ புற்றில் நுழைந்தது.

5. ______________________ உயரமானவை.

6. அப்பா ______________________ வாங்கினார்.

7. ______________________ அழகான பறவை.

8. மிகப்பெரிய விலங்கு ______________________.

| | | | |
|---|---|---|---|
| மயில் | மாணவர்கள் | பாம்பு | பொம்மை |
| கதிர் | யானை | மரங்கள் | வாணி |

(ஆ) ஒவ்வொரு வரிசையிலும் பொருந்தாததைக் (X) குறியிடுவோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. |  |  |  |
| 2. |  | <br> |  |
| 3. |  |  |  |
| 4. |  |  |  |
| 5. |  |  |  |

## 19.10 செயல் திட்டம்

நீங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள பொருள்களைத் திணை அடிப்படையில் அட்டவணைப்படுத்தி வருக.

## 19.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. குளிர்காலம் | – | Winter |
| 2. வெயில்காலம் | – | Summer |
| 3. மழைக்காலம் | – | Rainy season |
| 4. இலையுதிர்காலம் | – | Autumn |
| 5. வசந்தகாலம் | – | Spring |
| 6. நொடி | – | Second |
| 7. நிமிடம் | – | Minute |
| 8. மணி | – | Hour |
| 9. நாள் | – | Day |
| 10. மாதம் | – | Month |
| 11. ஆண்டு | – | Year |

# பாடம் 20



## 20.1 பேசுவோம்

வடக்கு
North

மேற்கு
West



கிழக்கு
East

தெற்கு
South

**சொற்கள்**

கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு

## 20.2 அறிவோம்

### திசைகள்












## 20.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| கிழக்கு | வடகிழக்கு |
| மேற்கு | வடமேற்கு |
| வடக்கு | தென்கிழக்கு |
| தெற்கு | தென்மேற்கு |

## 20.4 சொல்லிப் பழகுவோம்




சூரியன் கிழக்கில் தோன்றும்




சூரியன் மேற்கில் மறையும்

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்.

| | |
|---|---|
| EAST ○ | ○ தெற்கு |
| WEST ○ | ○ கிழக்கு |
| NORTH ○ | ○ வடக்கு |
| SOUTH ○ | ○ மேற்கு |

(ஆ) திசைகளின் பெயர்களை எடுத்து எழுதுவோம்.



| | | | |
|---|---|---|---|
| வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| தென்மேற்கு | வடகிழக்கு | வடமேற்கு | தென்கிழக்கு |

(இ) விடை காண்போம்.

1. நீங்கள் படிக்கும் பள்ளி உங்கள் வீட்டிலிருந்து எந்தத் திசையில் உள்ளது?

______________________________.

2. வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையே உள்ள திசை எது?

______________________________.

3. சூரியன் உதிக்கும் திசை எது?

______________________________.

4. தெற்கிற்கும் மேற்கிற்கும் இடையே உள்ள திசை எது?

______________________________.

5. எத்தனை திசைகள் உள்ளன ?

______________________________.

## 20.5 பாடி மகிழ்வோம்

### திசை

கதிர் முளைப்பது கிழக்கு – அதன்
எதிர் இருப்பது மேற்கு
முதிர் இமயம் வடக்கு – அதன்
எதிர் குமரி தெற்கு

- பாரதிதாசன்



## 20.6 கேட்டல் கருத்தறிதல்

**திசைகள் அறிவோம்**




காலையில் சூரியன் எழும் திசையை நோக்கி நிற்கவேண்டும். அத்திசையே கிழக்கு. பின்பு, நம் கைகள் இரண்டையும் தோள் உயரத்திற்கு விரிக்கவேண்டும். நம் வலக்கை காட்டும் திசை தெற்கு. இடக்கை காட்டும் திசை, வடக்கு. நம் பின்னால் இருக்கும் திசை, மேற்கு. பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சுழன்று, சூரியனை வலம் வருகிறது. அதனால், சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைகிறது.

## 20.7 செயல்திட்டம்

உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைப் பயன்படுத்தித் திசைகாட்டி (Compass) ஒன்றைச் செய்து வருக.




## 20.8 அறிந்து கொள்வோம்

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | – Sun | கிழக்கு | – East |
| திசை | – Direction | மேற்கு | – West |
| வலக்கை | – Right hand | வடக்கு | – North |
| இடக்கை | – Left hand | தெற்கு | – South |

## பயிற்சிகள்

(1) படத்தைப் பார்த்துக் கதை கூறுக.



(2) கீழே கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி இரண்டு தொடர் கூறுக.

1. ஞாயிறு
2. சித்திரை
3. ஆடுபுலி ஆட்டம்
4. பல்லாங்குழி
5. கிட்டிப்புள்

(3) பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுக.

1. உமக்குத் தெரிந்த மரபு விளையாட்டுகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
2. ஒரு வாரத்தின் கிழமைகளை வரிசையாகக் கூறுக.
3. தமிழ் மாதங்களில் முதல் மாதம் எது?
4. உனக்குப் பிடித்த மாதம் எது? ஏன்?
5. உனக்கு மிகவும் பிடித்த மரபு விளையாட்டு எது? காரணம் கூறுக.

(4) கீழ்க்காணும் படங்களைப் பார்த்து அவற்றின் பால்களை எழுதுக.











(5) கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படித்து இனவெழுத்துகளை எழுதுக.

தங்கத் தட்டில் பழங்களாம்!
தங்கை கொண்டு வந்தாளாம்!
செல்லக்கிளி மெல்ல வந்து
தங்கை தோளில் அமர்ந்ததாம்!
பஞ்சு போன்ற கையாலே
பழங்கள் தின்னத் தந்தாளாம்!
கொத்தித் தின்ற பச்சைக்கிளி
கொஞ்சிப் பேசி மகிழ்ந்ததாம்!

(6) விடுபட்ட கிழமைகளைப் படிகளில் வரிசைப்படுத்துவோம்.




| | | | |
|---|---|---|---|
| வெள்ளி | புதன் | செவ்வாய் | சனி |
| ஞாயிறு | வியாழன் | திங்கள் | |

(7) உரையாடலைப் படித்து வினா எழுத்துகளை எழுதுக.



| | | |
|---|---|---|
| மாறன் | : | கவி எப்படி இருக்க? |
| கவி | : | நல்லா இருக்கேன் மாறா. நீ எப்படி இருக்க? |
| மாறன் | : | நலம். நேற்று ஏன் வகுப்பிற்கு வரல? |
| கவி | : | ஊருக்குப் போயிருந்தேன். |
| மாறன் | : | எந்த ஊருக்கு? |
| கவி | : | மதுரைக்கு. |
| மாறன் | : | அங்க எதற்குப் போன? |
| கவி | : | ஊரில் திருவிழா, அதற்காகப் போனேன். |
| மாறன் | : | யார் யாரெல்லாம் உன்னோடு வந்தாங்க? |
| கவி | : | அப்பா, அம்மா, தங்கை எல்லாரும் வந்தாங்க. |
| மாறன் | : | ஊரில் இருந்து எப்போது திரும்பி வந்தீங்க? |
| கவி | : | நேற்று இரவுதான் வந்தோம். |
| மாறன் | : | எனக்கு என்ன வாங்கி வந்த? |
| கவி | : | உனக்குப் பிடிச்ச புல்லாங்குழல். |
| மாறன் | : | ஐ.. புல்லாங்குழலா? மிக்க மகிழ்ச்சி கவி. |

(8) மரபு விளையாட்டுகளை வட்டமிடுக.

கபடி | சதுரங்கம் | தாயம்

இறகுப்பந்து | சுண்டாட்டம்

பாண்டி ஆட்டம் | மட்டைப்பந்து | கால்பந்து

பல்லாங்குழி | சிலம்பாட்டம்

(9) உயர்திணை, அஃறிணைச் சொற்களை அட்டவணைப்படுத்துக.

யானை, பூனை, ஆமைகள், மீன்கள், பிரியா, குமரன், காய்கள், பழங்கள், திசைகள், நாற்காலி, பூக்கள், விருதுகள், ஆசிரியர், மாணவர், ஓட்டுநர், உழவர்.

| உயர்திணைச் சொற்கள் | அஃறிணைச் சொற்கள் |
| --- | --- |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(10) வரிசைப்படுத்துவோம்.

1 சித்திரை ______________

2 ______________

3 ______________

4 ______________

5 ______________

6 ______________

7 ______________

8 ______________

9 ______________

10 ______________

11 ______________

12 ______________

| | | |
|---|---|---|
| வைகாசி | புரட்டாசி | தை |
| மார்கழி | ஐப்பசி | ஆனி |
| ஆவணி | பங்குனி | மாசி |
| ஆடி | கார்த்திகை | சித்திரை |

# பாடம் 21



21.1 பேசுவோம்




**சொற்கள்**

| | |
|---|---|
| வாணவேடிக்கை | கட்டடம் |
| மின்விளக்கு | கொண்டாட்டம் |

## 21.2 அறிவோம்

### விழாக்கள் & பண்டிகைகள்



போகி



தைப்பொங்கல்



உழவர் திருநாள்



காணும் பொங்கல்



தீபாவளி



ஆடிப்பெருக்கு



இரமலான்



கிறிஸ்துமஸ்

## 21.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| போகி | தீபாவளி |
| தைப்பொங்கல் | ஆடிப்பெருக்கு |
| உழவர் திருநாள் | இரமலான் |
| காணும் பொங்கல் | கிறிஸ்துமஸ் |

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| கார்த்திகைத் தீபம் | ஈகைத் திருநாள் |
| சித்திரை விழா | புனித வெள்ளி |

## 21.4 சொல்லிப் பழகுவோம்



புத்தாண்டை வரவேற்போம்



பொங்கல் கொண்டாடுவோம்



இரமலான் நோன்பிருப்போம்



கிறிஸ்துமஸ் பரிசளிப்போம்

## பயிற்சிகள்

(அ) படத்திற்குப் பொருத்தமான விழாக்களை எடுத்து எழுதுவோம்.



______________________



______________________



______________________



______________________



______________________

கிறிஸ்துமஸ் | இரமலான் | பொங்கல் | புத்தாண்டு | தீபாவளி

(ஆ) கண்டுபிடிப்போம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தீ | நா | பு | த் | தா | ண் | டு | மா |
| பா | ச | டு | போ | பி | சௌ | பூ | கி |
| வ | கி | றி | ஸ் | து | ம | ஸ் | போ |
| ளி | அ | க | ம் | க | ட | ய் | க |
| ழ | இ | ர | ம | லா | ன் | தா | ம் |
| ள் | நா | ரு | தி | ர் | வ | ழ | உ |

போகி | தீபாவளி | உழவர் திருநாள்

கிறிஸ்துமஸ் | புத்தாண்டு | இரமலான்

## 21.5 பாடி மகிழ்வோம்

### தமிழர் திருநாள்

தைம்மதி பிறக்கும் நாள்; தமிழர் தங்கள்
செம்மை வாழ்வின் சிறப்புநாள்; வீடெலாம்
பாலும் வெல்லப்பாகும் பருப்பு நெய்
ஏலமும் புதுநெருப் பேறி, அரிசியைப்
பண்ணிலே பொங்கப் பண்ணித் தமிழர்
எண்ணிலே மகிழ்ச்சி ஏற்றும் இன்பநாள்!

- பாரதிதாசன்



## பொருள் அறிவோம்

| | | |
|---|---|---|
| தைம்மதி | – | தை மாதம் |
| செம்மை | – | சிறப்பு |
| ஏலம் | – | ஏலக்காய் |
| பண்ணிலே | – | பக்குவமாக |
| எண்ணிலே | – | மனத்திலே |

## 21.6 கேட்டல் கருத்தறிதல்

### பொங்கல் திருநாள்



பூங்குடி, அழகிய கிராமம். அங்குதான் அருண் பிறந்தான். ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் விழா எப்பொழுது வரும் என்று ஏக்கத்தோடு காத்திருப்பான். ஏனெனில், அப்போதுதான் அவனுடைய அப்பா அவனைப் பூங்குடிக்கு அழைத்துச் செல்வார். பொங்கல் விழா போகி, தைப்பொங்கல், உழவர் திருநாள், காணும் பொங்கல் என்று நான்கு நாள் நடைபெறும். தெருக்கள்தோறும் தோரணங்கள் கட்டப்பட்டு இருக்கும். வீட்டின் வாசலில் வண்ண வண்ணக் கோலங்கள் போடப்பட்டிருக்கும். அவை, பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். அருண் தன் தாத்தா, பாட்டி, பெரியப்பா, சித்தப்பா, அத்தை, மாமா, நண்பர்கள் என்று எல்லாரிடமும் அன்பாய்ப் பேசி மகிழ்ந்திருப்பான்.

## 21.7 அறிவோம்

### எண்ணுப்பெயர்கள் (11/20)

| | | | |
|---|---|---|---|
| 11<br>பதினொன்று | | 12<br>பன்னிரண்டு | |
| | 13<br>பதின்மூன்று | | 14<br>பதினான்கு |
| 15<br>பதினைந்து | | 16<br>பதினாறு | |
| | 17<br>பதினேழு | | 18<br>பதினெட்டு |
| 19<br>பத்தொன்பது | | 20<br>இருபது | |

## 21.8 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| பதினொன்று | பதினாறு |
| பன்னிரண்டு | பதினேழு |
| பதின்மூன்று | பதினெட்டு |
| பதினான்கு | பத்தொன்பது |
| பதினைந்து | இருபது |

## 21.9 சொல்லிப் பழகுவோம்




மாதங்கள் பன்னிரண்டு



செல்வங்கள் பதினாறு

## பயிற்சிகள்

(அ) எடுத்து எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| 19 | 16 | 12 |
| ______ | ______ | ______ |
| 13 | 20 | 17 |
| ______ | ______ | ______ |
| 14 | 18 | 15 |
| ______ | ______ | ______ |

| | | |
|---|---|---|
| பதினைந்து | பன்னிரண்டு | பதினேழு |
| பதினாறு | இருபது | பதின்மூன்று |
| பத்தொன்பது | பதினான்கு | பதினெட்டு |

(ஆ) பொருள்களின் விலையை எழுதுவோம்.

 = 2  = 9  = 10

 = 1  = 5

 +  = பதினொன்று

 +  +  = ____________

 +  +  = ____________















## 21.10 செயல்திட்டம்

உறவினர்களோடு கொண்டாடிய விழாக்கள் பற்றிக் குறிப்பேடு தயாரித்து வருக.

## 21.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| புத்தாண்டு | – | New year |
| பொங்கல் | – | Pongal |
| இரமலான் | – | Ramzan |
| கிறிஸ்துமஸ் | – | Christmas |
| கடற்கரை | – | Beach |
| ஆறு | – | River |
| உழவர் | – | Farmer |
| தீபாவளி | – | Diwali |
| எண்கள் | – | Numbers |



# பாடம் 22

## 22.1 பேசுவோம்


சொற்கள்
கேழ்வரகு இட்லி
தினைப்பொங்கல்
வாழைப்பூ வடை
அரிசி இடியாப்பம்
கோதுமை உப்புமா
முடக்கறுத்தான் தோசை

## 22.2 அறிவோம்

### தமிழர் உணவுகள்

| தானியங்கள் | | உணவுகள் | | பெயர்கள் |
|---|---|---|---|---|
|  கம்பு | + |  கூழ் | = | கம்பங்கூழ் |
|  சோளம் | + |  பிட்டு | = | சோளப்பிட்டு |
|  தினை | + |  பாயாசம் | = | தினைப்பாயாசம் |

தானியங்கள் உணவுகள் பெயர்கள்

 +  = கேழ்வரகுக்களி

கேழ்வரகு களி

 +  = சாமை அதிரசம்

சாமை அதிரசம்

 +  = கொள்ளு முறுக்கு

கொள்ளு முறுக்கு

## 22.3 திரும்பப் படிப்போம்

கம்பங்கூழ்

சோளப்பிட்டு

தினைப்பாயாசம்

கேழ்வரகுக்களி

சாமை அதிரசம்

கொள்ளு முறுக்கு

**புதிய சொற்கள்**

எள்

வரகு

குதிரைவாலி

## 22.4 சொல்லிப் பழகுவோம்



எள்ளுருண்டை தின்னலாம்



கம்பங்கூழ் குடிக்கலாம்

## பயிற்சிகள்

( அ) பொருத்தமற்றதை நீக்குக.

1. கொள்ளு, சாமை, களி

2. களி, அதிரசம், சோளம்

3. கூழ், பாயாசம், முறுக்கு

(ஆ) விடுபட்ட எழுத்தை எழுதுக.

1. சா ___ (யை/மை)

2. பி ___ டு (ம்/ட்)

3. தி ___ (னை/மை)

4. ___ ம்பு (க/ச)

5. சோ ___ ம் (ல/ள)

(இ) ஒரே நிறமுடைய எழுத்துகளை முறைப்படுத்தி உணவுப் பெயர்களை எழுதுக.

பா மு க இ

று சோ ம் கூ யா

அ ள ட் தோ ச பு க்

சை ம் கு ம் தி ழ்

ர டி ச லி ம்

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________
5. ______________________
6. ______________________
7. ______________________
8. ______________________

## 22.5 பாடி மகிழ்வோம்

### உடல் நலம் பேணல்

கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா!
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா!
தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின் உணவும்
நோயை ஓட்டி விடுமப்பா
நூறு வயது தருமப்பா!

- கவிமணி தேசிக விநாயகனார்.



## 22.6 கேட்டல் கருத்தறிதல்

### பயிர்ப் பாதுகாப்பு



தமிழ்நாட்டில் மலைசார்ந்த பகுதியிலும் மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் கம்பு, வரகு, சோளம் முதலிய சிறுதானியங்களை விதைத்தனர். அவற்றை விதைத்த பிறகு யானை, பன்றி, பறவைகள் முதலியவற்றிடமிருந்து பாதுகாக்க நினைத்தனர். விளைநிலங்களுக்கு நடுவில் பரண் வீடு கட்டினர். அதில் இருந்து கொண்டு காலையும் மாலையும் காவல் காத்தனர். இதனைத் தினைப்புனம் காத்தல் என்பர். சங்க இலக்கியத்தில் இதைப் பற்றிப் பாடல்கள் உள்ளன.

## 22.7 அறிவோம்

சுட்டு எழுத்துகள் (அ, இ, உ)



அது விமானம்



இது பல்லி



அவை பறவைகள்



இவை எறும்புகள்



அந்த வீடு



இந்த நாற்காலி





அவன் பேருந்தில் ஏறினான்

இவன் என் நண்பன்





அவள் பூப்பறிக்கிறாள்

இவள் உலக அழகி





அங்கு ஒட்டகம் நிற்கிறது

இங்கு உட்காருங்கள்

## 22.8 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| அது விமானம் | அவன் பேருந்தில் ஏறினான் |
| இது பல்லி | இவன் என் நண்பன் |
| அவை பறவைகள் | அவள் பூப்பறிக்கிறாள் |
| இவை எறும்புகள் | இவள் உலக அழகி |
| அந்த வீடு | அங்கு ஒட்டகம் நிற்கிறது |
| இந்த நாற்காலி | இங்கு உட்காருங்கள் |

### புதிய சொற்கள்

அவர்கள்

இவர்கள்

## 22.9 சொல்லிப் பழகுவோம்



அவன் கடைக்குச் சென்றான்




இவள் பள்ளிக்குச் செல்வாள்



அங்கு பறவைகள் வரும்



இங்கு புறாக்கள் அமரும்

## பயிற்சிகள்

(அ) பொருத்தமானதை எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| 1. அவன் மரத்தில் ஏறினான் | அவன் | அது |
| 2. ______ நிலவைப் பார் | அது | அந்த |
| 3. ______ நீர் ஊற்றுகிறாள் | அவை | அவள் |
| 4. ______ பெரிய விலங்கு | அவர் | அது |
| 5. ______ மலை உயரமானது | இவன் | இந்த |
| 6. ______ எனது வீடு | இது | இவை |
| 7. ______ இனிப்பு கிடைக்கும் | இது | இங்கு |
| 8. ______ வண்டி நிற்கும் | அங்கு | அது |
| 9. ______ கடல் மீன்கள் | அவை | அவன் |
| 10. ______ மீனாவின் புத்தகங்கள் | அவர் | இவை |

(ஆ) பொருத்துவோம்.

| | |
|---|---|
| 1. அவள் | பேசினார் |
| 2. அவன் | விளையாடுவேன் |
| 3. அவை | பாடினாள் |
| 4. அவர் | தூங்கின |
| 5. அங்கு | வென்றான் |

## 22.10 செயல்திட்டம்

பல நாடுகளிலுள்ள பாரம்பரிய உணவுகள் பற்றிய செய்திகளை இணையத்தில் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

## 22.11 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. கேழ்வரகு | - | Finger millet |
| 2. கோதுமை | - | Wheat |
| 3. கம்பு | - | Pearl millet |
| 4. சோளம் | - | Sorghum |
| 5. தினை | - | Foxtail millet |
| 6. சாமை | - | Little millet |
| 7. கொள்ளு | - | Horse gram |
| 8. வரகு | - | Kodo millet |
| 9. மக்காச்சோளம் | - | Corn |
| 10. குதிரைவாலி | - | Barnyard millet |
| 11. அரிசி | - | Rice |

## பாடம் 23



## 23.1 பேசுவோம்



### சொற்கள்

செடிகள் கொடிகள் புதர்கள் மரங்கள் பூக்கள்

பூங்கா சுற்றுலாப் பயணிகள்

## 23.2 அறிவோம்

### பூக்கள்



செங்காந்தள்



அரளி



எருக்கம்



அனிச்சம்



செண்பகம்



குறிஞ்சி



செவ்வந்தி



தாழம்பூ



மல்லிகை



செம்பருத்தி



தாமரை



சூரியகாந்தி

## 23.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| செங்காந்தள் | செவ்வந்தி |
| அரளி | தாழம்பூ |
| எருக்கம் | மல்லிகை |
| அனிச்சம் | செம்பருத்தி |
| செண்பகம் | தாமரை |
| குறிஞ்சி | சூரியகாந்தி |

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| சம்பங்கி | நந்தியாவட்டை |
| ரோஜா | மகிழம்பூ |
| கனகாம்பரம் | மருதம் |

## 23.4 சொல்லிப் பழகுவோம்



அனிச்சம் நுகர்ந்தால் வாடும்



மல்லிகை மணம் வீசும்



எருக்கம் நோய் தீர்க்கும்



குறிஞ்சிப்பூ அரிதாய்ப் பூக்கும்

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்.



அனிச்சம்



எருக்கம்



தாமரை



செண்பகம்



செங்காந்தள்

(ஆ) படத்திலுள்ள பூக்களின் பெயர்களை எழுதுவோம்.



______________________



______________________



______________________



______________________



______________________



______________________

செவ்வந்தி | குறிஞ்சி | தாழம்பூ | செம்பருத்தி | அரளி | மல்லிகை

## 23.5 பாடி மகிழ்வோம்

### மலர்கள்

மலர் இன்முகம் காட்டிடுமே - அதனால்
இன்பமும் ஊட்டிடுமே.
நன்மணம் வீசிடுமே - சுற்றி
நான்கு திசைகளுமே.
வண்டுகள் தேன்விரும்பி - நாடி
வந்திடும் மொய்த்திடவே.
பாசமாய் மக்களுமே - இதனைப்
பறித்துச் சூடுவரே.
மலர் என உள்ளம் - நமக்கு
மலர வேண்டுமடி.
பலரும் போற்றிடவே - உலகில்
பண்புடன் வாழ்வோமடி.

- அழ. வள்ளியப்பா



## 23.6 கேட்டல் கருத்தறிதல்

### குறிஞ்சி மலர்



தமிழ்நாட்டில் பூக்கும் பூக்களுள் முக்கியமானதாகக் கருதப்படுவது குறிஞ்சிப்பூ. இது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும். குறிஞ்சிச் செடிகள் புதர்வகையைச் சேர்ந்தவை. இவை, தமிழ்நாட்டில் கொடைக்கானல், நீலகிரி ஆகிய பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. அப்பகுதியில் வாழும் மக்கள் இந்தப் பூக்கள் பூக்கும் காலத்தை வசந்த காலமாகக் கருதுகின்றனர். குறிஞ்சி மலர்கள் பெரும்பாலும் நீல நிறத்திலும் கருநீல நிறத்திலும் இருக்கும். இவை, மணி போன்ற வடிவம் கொண்டவை. ஆகஸ்டு மாதத்தில் பூக்கத் தொடங்கும் இம்மலர்கள், டிசம்பர் வரை பூத்துக்குலுங்கும் தன்மை உடையவை.

## 23.7 அறிவோம்

### ஒருசொல் பலபொருள்



கயல் **மதி**நுட்பம் உடையவள்.

இரவில் **மதி** தோன்றும்.





பள்ளி நான்கு **மணி**க்கு முடியும்.

வள்ளி முத்து**மணி** வாங்கினாள்.





திருக்குறள் ஓர் அற**நூல்**.

ஆடையைத் தைப்பது **நூல்**.





அன்னம் அழகாய் இருந்தது.

தட்டில் நிறைய அன்னம் இருந்தது.





கந்தன் மாலை வாங்கினான்.

அப்பா மாலை வருவார்.





ரோஜாவின் இதழ் அழகானது.

அழகன் வார இதழ் படித்தான்.



## 23.8 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| கயல் மதிநுட்பம் உடையவள். | இரவில் மதி தோன்றும். |
| பள்ளி நான்குமணிக்கு முடியும். | வள்ளி முத்துமணி வாங்கினாள். |
| திருக்குறள் ஓர் அறநூல். | ஆடையைத் தைப்பது நூல். |
| அன்னம் அழகாய் இருந்தது. | தட்டு நிறைய அன்னம் இருந்தது. |
| கந்தன் மாலை வாங்கினான். | அப்பா மாலை வருவார். |
| ரோஜாவின் இதழ் அழகானது. | அழகன் வார இதழ் படித்தான். |

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| படி | அணி |
| நகை | ஆறு |
| ஞாயிறு | திங்கள் |

## 23.9 சொல்லிப் பழகுவோம்



மாணவர்கள் புத்தகம் படித்தனர்



பூவிழி படியில் ஏறினாள்



மாலையில் கடற்கரைக்குச்
செல்லலாம்



மலர்களைத் தொடுத்து
மாலையாக்கலாம்

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்.



## 23.10 செயல்திட்டம்

உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பூக்களைச் சேகரித்து, வரைபடத்தாளில் ஒட்டி அவற்றின் பெயர்களைத் தமிழில் எழுதி வருக.

## 23.11 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. செங்காந்தள் | - | Glory lily |
| 2. தாழம்பூ | - | Screwpine |
| 3. அரளி | - | Oleander |
| 4. செவ்வந்தி | - | Chrysanthemum |
| 5. செம்பருத்தி | - | Hibiscus |
| 6. தாமரை | - | Lotus |
| 7. மல்லிகை | - | Jasmine |
| 8. அனிச்சம் | - | Scarlet pimpernel |
| 9. எருக்கம் | - | Crown Flower |
| 10. செண்பகம் | - | Champak |

# பாடம் 24



## 24.1 பேசுவோம்




### சொற்கள்

உடல் உறுப்புகள் இதயம் நுரையீரல் நரம்பு மூளை

## 24.2 அறிவோம்

### உடல் உறுப்புகள்



இதயம்



மூளை



நுரையீரல்



நரம்பு



பல்



நாக்கு



உதடு



புருவம்



முடி



நகம்

## 24.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| இதயம் | மூளை |
| நுரையீரல் | நரம்பு |
| பல் | நாக்கு |
| உதடு | புருவம் |
| முடி | நகம் |

## 24.4 சொல்லிப் பழகுவோம்



கண்களால் பார்க்கலாம்



காதுகளால் கேட்கலாம்



பற்களால் கடிக்கலாம்



நாக்கால் சுவைக்கலாம்

## பயிற்சிகள்

**(அ) உடல் உறுப்புகளின் பெயர்களை எடுத்து எழுதுவோம்.**



1. ______________________



2. ______________________



3. ______________________



4. ______________________



5. ______________________

| | |
|---|---|
| இதயம் | நுரையீரல் |
| பல் | மூளை |
| நாக்கு | |

(ஆ) தேர்ந்தெடுத்து எழுதுவோம்.



| | | |
|---|---|---|
| கண் | முழங்கால் | கை விரல் |
| வாய் | மூக்கு | தலை |
| காது | கை | கால் |

## 24.5 பாடி மகிழ்வோம்

### அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

- பாரதியார்



## 24.6 கேட்டல் கருத்தறிதல்

### ஆமையின் அறிவுரை



ஆமை : தம்பி, யார் நீ?

சிறுவன் : என் பெயர் முகிலன்.

ஆமை : ஏன் வருத்தமாக இருக்கிறாய்?

சிறுவன் : நான் என் நண்பனிடம் கடுமையாகப் பேசிவிட்டேன்.

ஆமை : ஏன் அப்படிப் பேசினாய்?

சிறுவன் : அவன் எப்போதும் என்னிடம் சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறான். அதனால்தான் அப்படிப் பேசினேன்.

ஆமை : அவ்வாறு செய்யக்கூடாது.

சிறுவன் : தெரியும்... ஆனால், என்னால் சினத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லையே, நான் என்ன செய்யட்டும்?

ஆமை : எனக்குத் துன்பம் வரும்போது, எனது நான்கு கால், ஒரு தலை ஆகிய ஐந்து உறுப்பையும் ஓட்டுக்குள் மறைத்துக் கொள்வேன்.

சிறுவன் : ஓ! அப்படியா!

ஆமை : ஆமாம். நீயும் உன் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தையும் கட்டுப்படுத்தப் பழகிக்கொண்டால், யாருக்கும் தீங்கு நேராது. நீயும் மனவருத்தம் இன்றி இருக்கலாம்.

சிறுவன் : சரி. இனி, நானும் அப்படியே செய்கிறேன்... நன்றி, நான் வீட்டிற்குப் போகிறேன்.

ஆமை : உம்.. உம்.. கவனமாகச் செல்.

## 24.7 செயல்திட்டம்

காய்கனிகளைக் கொண்டு, மனித உருவம் செய்து வருக.



## 24.8 அறிந்து கொள்வோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பல் | - | Tooth | 9. மூளை | - | Brain |
| 2. நாக்கு | - | Tongue | 10. இதயம் | - | Heart |
| 3. புருவம் | - | Eyebrow | 11. நுரையீரல் | - | Lung |
| 4. உதடு | - | Lip | 12. நரம்பு | - | Nerve |
| 5. முடி | - | Hair | 13. கணையம் | - | Pancreas |
| 6. நகம் | - | Nail | 14. கல்லீரல் | - | Liver |
| 7. மூக்கு | - | Nose | 15. குடல் | - | Intestine |
| 8. காது | - | Ear | | | |

## பயிற்சிகள்

**1. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றனைப் பற்றி இரு தொடர் கூறுக.**

- பல்லாங்குழி
- பாண்டி ஆட்டம்
- தீபாவளி
- கிறிஸ்துமஸ்
- இரமலான்
- குறிஞ்சிப் பூ
- பொங்கல்
- சோறு

**2. விடுபட்ட இடத்தில் பொருத்தமான வினாச்சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. உங்கள் வீடு ______________ உள்ளது? — எப்படி / எங்கு
2. உன் தந்தை ______________ வேலை செய்கிறார்? — ஏன் / எங்கு
3. உன் பெயர் ______________ ? — எதற்கு / என்ன
4. உன் வீட்டுக்கு ______________ வந்திருக்கிறார்கள்? — யார் / எங்கு
5. இந்தக் கணக்கை ______________ செய்யவேண்டும்? — எங்குச் / எப்படிச்

3. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படிக்கக் கேட்டு, அதில் வரும் திணை, பால் ஆகியவற்றைக் கண்டுபிடித்துக் கூறுக.

கவியரசன் உழவு வேலை செய்தார். அவர் மனைவி நந்தினி. இருவரும் சேர்ந்தே வயலுக்குச் செல்வார்கள். அவர்கள் அழகான நாய் ஒன்றை வளர்த்தார்கள். இருவரும் காலையில் வேலைக்குச் சென்றால் மாலையில்தான் வீட்டிற்கு வருவார்கள். அவர்கள் வரும்வரை அவர்களது செல்லநாய் வீட்டிலுள்ள ஆடு, மாடு, கோழிகளைப் பாதுகாக்கும்.

4. உங்களுக்குப் பிடித்த மரபு விளையாட்டுகள் பற்றி இரு தொடர் கூறுக.

5. உரைப்பகுதியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

ஏறுதழுவல், தமிழர்களின் வீர விளையாட்டு. இதனைத் தற்போது 'ஜல்லிக்கட்டு' என்று அழைக்கின்றனர். ஏறு என்பது, காளைமாட்டைக் குறிக்கும். அதனை அடக்கி இளைஞர்கள் தம் வீரத்தை வெளிப்படுத்துவர். வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசுகள் வழங்குவர். வீரர்களிடம் பிடிபடாத காளைகளுக்கும் பரிசுகள் வழங்குவர். தமிழ்நாட்டில் தை மாதம் பொங்கல் விழாவின்போது, ஜல்லிக்கட்டு நடத்தப்படுகிறது. அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலகப் புகழ்பெற்றது.

**வினாக்கள்**

1. தமிழர்களின் வீர விளையாட்டு எது?

______________________________________.

2. ஏறுதழுவல் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

______________________________________.

3. ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டில் எந்த மாதத்தில் நடைபெறுகிறது?

______________________________________.

4. தமிழ்நாட்டில் எங்கு நடைபெறும் ஜல்லிக்கட்டு உலகப் புகழ்பெற்றது?

______________________________________.

5. ஏறு என்பது எந்த விலங்கைக் குறிக்கும்?

______________________________________.

ஜல்லிக்கட்டு | ஏறுதழுவல் | அலங்காநல்லூர் | காளை | தை

6. படத்திற்குப் பொருத்தமான சொற்களை எடுத்து எழுதுக.



____________________ மரம்

அவை/ அது



______________ பறவைகள்

இது/ இவை



______________ சிறுவன்

இவள்/ இவன்



______________ வீடு

அது/ அவை



______________ மான்

இது/ இவை

7. நீ கலந்துகொண்ட ஒரு விழாவைப் பற்றி மூன்று தொடர் கூறுக.

**8. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படிக்கக் கேட்டு, வினாக்களுக்கு விடை கூறுக.**



உலகிலேயே மிக உயரமானது ஏஞ்சல் அருவி (Angel Falls). இது வெனிசுலா நாட்டில் உள்ளது. அவெண்டியூய் (Auyantepui) என்னும் மலையில் இருந்து விழுகிறது. இதன் ஒரு துளி நீர், தரையை அடைய 14 நிமிடம் ஆகிறது. அருவியிலிருந்து விழும் நீர்த்துளிகள், வீசும் காற்றினால் பெருமளவில் சாரலாகப் பறக்கின்றன. எஞ்சிய நீர்த்துளிகள் கெரெப் (kerab) என்னும் ஆற்றில் விழுகின்றன. 1933ஆம் ஆண்டு அமெரிக்க விமானி ஜிம்மி ஏஞ்சல் என்பவர் தங்கத்தைத் தேடி மலைகளின்மேல் பறந்து சென்றார். அப்போது இந்த அருவியைக் கண்டார். அதன் பிறகே இது வெளி உலகிற்குத் தெரிய வந்தது. அதனால், அவரின் பெயரால் இது ஏஞ்சல் அருவி என அழைக்கப்படுகிறது.

வினாக்கள்

1. உலகிலேயே மிக உயரமான அருவி எது?

2. ஏஞ்சல் அருவி எந்த நாட்டில் உள்ளது?

3. ஏஞ்சல் அருவியைக் கண்டறிந்தவர் யார்?

4. ஏஞ்சல் அருவி எந்த ஆண்டு கண்டறியப்பட்டது?

5. ஏஞ்சல் அருவியிலிருந்து விழும் நீர் தரையை அடைய எத்தனை நிமிடங்கள் ஆகின்றது?

| | | |
|---|---|---|
| ஜிம்மி ஏஞ்சல் | 14 நிமிடம் | 1933 |
| வெனிசுலா | ஏஞ்சல் | |

9. கிழமைகளின் தமிழ்ப் பெயரை எழுதுக.

1. SUNDAY - ____________________

2. MONDAY - ____________________

3. TUESDAY - ____________________

4. WEDNESDAY - ____________________

5. THURSDAY - ____________________

6. FRIDAY - ____________________

7. SATURDAY - ____________________

**10. பின்வரும் உரைப்பகுதியில் இன எழுத்து கொண்ட சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.**



காவியா, தன் தந்தையின் சொந்த ஊரான தஞ்சாவூருக்குச் சென்றாள். அங்கு வழியெல்லாம் மரங்கள் இருந்தன. அவற்றிலிருந்து இனிய தென்றல் காற்று வீசியது. சற்றுத் தொலைவில் தங்கம் போன்ற நெற்கதிர்கள் விளைந்த வயல்களைக் காவியா கண்டாள். வயலின் அருகே சென்றாள். அங்கு மஞ்சள் நிறப் பூக்களுக்கு இடையே நண்டுகள் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்டு காவியா மகிழ்ந்தாள்.

**11. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பன்னிரண்டு | ○ ○ | 20 |
| 2. பதின்மூன்று | ○ ○ | 14 |
| 3. பதினான்கு | ○ ○ | 12 |
| 4. பதினைந்து | ○ ○ | 13 |
| 5. இருபது | ○ ○ | 15 |

12. விடுபட்ட தமிழ் மாதங்களை எழுதுக.

சித்திரை, வைகாசி, ____________, ஆடி, ஆவணி, ____________,

ஐப்பசி, ____________, ____________, தை, ____________, ____________.

13. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை கூறுக.

கபடி கபடி விளையாடு
கண்ணாமூச்சி விளையாடு
ஓடிப்பிடித்து விளையாடு
ஒளிந்து பிடித்து விளையாடு
பாண்டி ஆட்டம் விளையாடு
பம்பரம் சுற்றி விளையாடு

1. பாடலில் எத்தனை விளையாட்டுகளின் பெயர்கள் உள்ளன?
2. எந்த விளையாட்டின் பெயர் இரண்டு முறை வந்துள்ளது?
3. பாடலில் ஒரே மாதிரி ஓசையில் முடியும் சொல் எது?
4. எந்த விளையாட்டுக்குக் கட்டம் போட்டு விளையாடவேண்டும்?
5. பாடலில் உங்களுக்குப் பிடித்த விளையாட்டு எது?

14. கீழ்க்காணும் தொடர்களில் எண்களுக்குப் பொருத்தமான எண்ணுப்பெயர்களுக்குக் (✔) குறியிடுக.

1. என் பிறந்தநாள் இந்த மாதம் 15 ஆம் நாள் வருகிறது.

☐ பதினைந்து ☐ பன்னிரண்டு

2. 20 ரூபாய் கொடுத்து, நான் புத்தகம் வாங்கினேன்.

☐ பத்தொன்பது ☐ இருபது

3. எண் 17, ஸ்டாரன்ஸ் சாலையில் என் வீடு உள்ளது.

☐ பதினாறு ☐ பதினேழு

15. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து அதில் வண்ணமிடப்பட்ட சொற்களின் பால் கூறுக.



மாலை நேரம். இனியன் பூங்காவிற்குச் சென்றான். செல்லும் வழியில் ஒரு நாய்க்குட்டி தொடர்ந்து குரைக்கும் ஒலி கேட்டது. அவன் அருகில் சென்று பார்த்தான். காகங்கள் குட்டியைச் சூழ்ந்து இருந்தன; உடனே அவற்றை விரட்டினான்; தனியாகத் தவித்த குட்டியை அதன் தாயிடம் சேர்த்தான்; பின்பு வீட்டிற்கு வந்தான். நடந்த நிகழ்வைத் தன் தங்கையிடம் அவன் கூறினான். அவள் மகிழ்ந்தாள். பின்னர் இருவரும் தம் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினர்.

16. திசைகளின் பெயர்களை நிரப்புக.

சூரியன் காலையில் ______________ திசையில் தோன்றும்.

சூரியன் உதிக்கும் திசைக்கு வலப்பக்கம் ______________ திசை.

சூரியன் மாலையில் ______________ திசையில் மறையும்.

சூரியன் உதிக்கும் திசைக்கு இடப்பக்கம் ______________ திசை.

| தெற்கு | மேற்கு | வடக்கு | கிழக்கு |
|---|---|---|---|



## பாடம் 25



## 25.1 பேசுவோம்



### சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| திராட்சை | பப்பாளி | கொய்யா | பலாப்பழம் |
| மாதுளை | ஆப்பிள் | சாத்துக்குடி | ஆரஞ்சு |

## 25.2 அறிவோம்

### பழங்கள்



நாவல்பழம்



அத்திப்பழம்



சப்பாத்திக்கள்ளிப்பழம்



சீத்தாப்பழம்



சப்போட்டாப்பழம்



இலந்தைப்பழம்



வெள்ளரிப்பழம்



பனம்பழம்



முந்திரிப்பழம்



விளாம்பழம்



கொய்யாப்பழம்



மாதுளம்பழம்

## 25.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| நாவல்பழம் | வெள்ளரிப்பழம் |
| அத்திப்பழம் | பனம்பழம் |
| சப்பாத்திக்கள்ளிப்பழம் | முந்திரிப்பழம் |
| சீத்தாப்பழம் | விளாம்பழம் |
| சப்போட்டாப்பழம் | கொய்யாப்பழம் |
| இலந்தைப்பழம் | மாதுளம்பழம் |

**புதிய சொற்கள்**

முலாம்பழம்　அன்னாசி　நெல்லி

## 25.4 சொல்லிப் பழகுவோம்



திராட்சை புளிக்கும்



மாம்பழம் இனிக்கும்



வெள்ளரி நீர்ச்சத்து உடையது



பலா முட்கள் கொண்டது

## பயிற்சிகள்

(அ) படங்களின் பெயர்களை எடுத்து எழுதுவோம்.



சீத்தாப்பழம் ______________________



______________________



______________________



______________________



______________________

முந்திரிப்பழம் | இலந்தைப்பழம் | சீத்தாப்பழம்

நாவல்பழம் | பனம்பழம்

(ஆ) சொல் விளையாட்டு.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | போ | | | | | | 10 |
| | | | | | | | | |
| | | 7 | | கொ 1 | | | | |
| 6 | | ந் | | | | | | |
| | | | | நா 8 | | 9 | | தி |
| லி | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | ளி | | ள் |
| 4 | ன | | | ழ | | | | |
| | | | | | | | | |
| 2 | த் | | | 5 | து | | | |

இடமிருந்து வலம் →

1. 

2. 

3. 

4. 

5. 

மேலிருந்து கீழ் ↓

6. 

7. 

8. 

9. 

10. 

## 25.5 பாடி மகிழ்வோம்

### சொல் ஒன்று பொருள் இரண்டு



மாலை மாலை மாலை மாலை
மலர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் மாலை
மகிழ்வாய் ஆடும் நேரம் மாலை



ஆடு ஆடு ஆடு ஆடு
அழகுத் தமிழில் பாடி ஆடு
அங்கே புல்லை மேய்வது ஆடு

ஆறு ஆறு ஆறு ஆறு
அழகாய் தண்ணீர் ஓடிடும் ஆறு
அன்புத் தோழி வயது ஆறு

- அங்கமங்கலம் குப்பு



## 25.6 கேட்டல் கருத்தறிதல்

### முக்கனி சுவைப்போம்

தமிழர்களின் அனைத்து விழாக்களிலும் பழங்கள் இடம்பெறுகின்றன. அவற்றுள் மா, பலா, வாழை சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றை முக்கனி என்று அழைப்பர். தமிழகப் பகுதிகளின் மண் வளத்திற்கேற்ப, இவை அதிகமாக விளைகின்றன. இக்கனிகளைப் பற்றித் தமிழ்க் கவிஞர்கள் பலர் பாடியுள்ளனர். சுவை மிகுந்த இப்பழங்கள் உடலுக்கு நன்மை செய்கின்றன.







சிந்திப்போம்



## 25.7 அறிவோம்

**பலசொல் ஒருபொருள்**



யானை தெருவில் வந்தது.



வாரணம் துதிக்கையைத் தூக்கியது.



வேழம் கரும்பு தின்றது.



குழந்தை பால் பருகியது.



குழவி நன்றாக உறங்கியது.



மழலை அழகாகச் சிரித்தது.



கிளி பேசியது.



தத்தை மரத்தில் அமர்ந்தது.



கிள்ளை பழம் உண்டது.



ஞாயிறு கிழக்கே உதிக்கும்.




பரிதி மேற்கே மறையும்.



கதிரவனை மேகம் மறைத்தது.

## 25.8 திரும்பப் படிப்போம்

யானை தெருவில் வந்தது.

வாரணம் துதிக்கையைத் தூக்கியது.

வேழம் கரும்பு தின்றது.

குழந்தை பால் பருகியது.

குழவி நன்றாக உறங்கியது.

மழலை அழகாகச் சிரித்தது.

கிளி அழகாகப் பேசியது.

தத்தை மரத்தில் அமர்ந்தது.

கிள்ளை பழம் உண்டது.

ஞாயிறு கிழக்கே உதித்கும்.

பரிதி மேற்கே மறையும்.

கதிரவனை மேகம் மறைத்தது.

### புதிய சொற்கள்

- ஒலி – ஓசை, அரவம்
- பெண் – தையல், மங்கை
- அரசன் – கோ, மன்னன்
- மதி – நிலா, திங்கள்

## 25.9 சொல்லிப் பழகுவோம்



நிலா ஒளி வீசியது



சந்திரன் வானில் தோன்றியது



தையல் நடந்து வந்தாள்



மங்கை மலர் சூடினாள்

## பயிற்சிகள்

(அ) படத்தைக் குறிக்கும் சொற்களை எடுத்து எழுதுவோம்.



1. மதி ______ 2. சந்திரன் ______



1. ______ 2. ______



1. ______ 2. ______



1. ______ 2. ______



1. ______ 2. ______

| | | | | |
|---|---|---|---|---|
| மதி | கிள்ளை | வேழம் | குழவி | ஞாயிறு |
| வாரணம் | பரிதி | தத்தை | சந்திரன் | மழலை |

(ஆ) பொருந்தாத சொல்லை வட்டமிடுவோம்.

1. கிளியைக் குறிக்காத சொல்.

கிள்ளை | மயில் | தத்தை

2. கதிரவனைக் குறிக்காத சொல்.

மதி | ஞாயிறு | பரிதி

3. நிலவைக் குறிக்காத சொல்.

ஞாயிறு | சந்திரன் | திங்கள்

4. குழந்தையைக் குறிக்காத சொல்.

மழலை | குழவி | தந்தை

5. யானையைக் குறிக்காத சொல்.

வேழம் | மேகம் | வாரணம்

## 25.10 செயல்திட்டம்




விளக்கப்படத்தாளில் (Chart Paper) உங்களுக்குப் பிடித்த பழங்களின் படங்களை ஒட்டி அவற்றின் பெயர்களை எழுதி வருக.

## 25.11 அறிந்துகொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. மாதுளம்பழம் | - | Pomegranate |
| 2. அத்திப்பழம் | - | Fig |
| 3. நாவல் பழம் | - | Jamun Fruit |
| 4. சீத்தாப்பழம் | - | Custard Apple |
| 5. கொய்யாப்பழம் | - | Guava |
| 6. இலந்தைப்பழம் | - | Jujube Fruit |
| 7. வெள்ளரிப்பழம் | - | Cucumber |
| 8. வாழைப்பழம் | - | Banana |
| 9. மாம்பழம் | - | Mango Fruit |
| 10. பலாப்பழம் | - | Jack Fruit |



# பாடம் 26

## 26.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| கத்தரிக்காய் | முருங்கைக்காய் | கருணைக்கிழங்கு |
| மாங்காய் | புடலங்காய் | முள்ளங்கி |
| பாகற்காய் | பூசணிக்காய் | |

## 26.2 அறிவோம்

### காய்கறிகள்



முட்டைக்கோசு



சுண்டைக்காய்



கோவைக்காய்



உருளைக்கிழங்கு



அவரைக்காய்



சுரைக்காய்



வெள்ளரிக்காய்



பச்சைமிளகாய்



வெங்காயம்



வெண்டைக்காய்



முருங்கைக்காய்



தக்காளி

## 26.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| முட்டைக்கோசு | வெள்ளரிக்காய் |
| சுண்டைக்காய் | பச்சைமிளகாய் |
| கோவைக்காய் | வெங்காயம் |
| உருளைக்கிழங்கு | வெண்டைக்காய் |
| அவரைக்காய் | முருங்கைக்காய் |
| சுரைக்காய் | தக்காளி |

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| கொத்தவரங்காய் | சேனைக்கிழங்கு |
| குடைமிளகாய் | வாழைக்காய் |

### சிந்திப்போம்



## 26.4 சொல்லிப் பழகுவோம்



குச்சிபோல் முருங்கைக்காய்



பானைபோல் சுரைக்காய்



பாம்புபோல் புடலங்காய்



கோலிபோல் சுண்டைக்காய்

## பயிற்சிகள்

(அ) காய்களின் பெயர்களை எடுத்து எழுதுவோம்.





1. ____________________ 2. ____________________ 3. ____________________





4. ____________________ 5. ____________________ 6. ____________________





7. ____________________ 8. ____________________ 9. ____________________

| | | |
|---|---|---|
| உருளைக்கிழங்கு | வெங்காயம் | வெள்ளரிக்காய் |
| முட்டைக்கோசு | மாங்காய் | பீட்ரூட் |
| கேரட் | புடலங்காய் | கொத்தவரங்காய் |

(ஆ) விடுபட்ட எழுத்துகளை எழுதி, காய்களின் பெயர்களைக் கண்டறிவோம்.



சு _____ க் _____ ய்



_____ த்த _____ க் _____ ய்



கோ _____ க்கா _____



_____ ரு _____ கை க் கா _____



பச்சை _____ ள _____ ய்



சுண் _____ க் _____ ய்



மு _____ ளங் _____



க _____ ணை _____ கி _____ ங்கு



வெண் _____ க்கா _____



_____ வ _____ க்காய்

## 26.5 பாடி மகிழ்வோம்



### மரம் வளர்ப்போம்



பூவே பூவே காய் தருவாய்
காயே காயே கனி தருவாய்
கனியே கனியே விதை தருவாய்
விதையே விதையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே மழை தருவாய்
மரத்தை வளர்ப்போம் மழை பெறுவோம்
மகிழ்ச்சியோடு வாழ்ந்திடுவோம்





-மு.செகசோதி



## 26.6 கேட்டல் கருத்தறிதல்

### முருங்கை மரம்



முருங்கை மரம் எல்லா வகை மண்ணிலும் வளரும். இந்த மரத்தின் இலை, பூ, காய் அனைத்துமே உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. அவற்றை முருங்கை ரசம், முருங்கைக்காய்க் குழம்பு, முருங்கைக்காய்க் கூட்டு, முருங்கைப்பூப் பொரியல், முருங்கைக்கீரை அவியல் போன்ற உணவு வகைகளாகச் சமைத்து உண்ணலாம். இதன் இலைகளில் ஊட்டச்சத்துகள் நிறைந்துள்ளன. இதனுடைய காய்களும் இலைகளும் இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மைகொண்டவை. முருங்கை மரத்தை ஆங்கிலத்தில் Moringa என்பர்.

## 26.7 அறிவோம்

**காலம்**



சசி போட்டியில் வென்றாள்



அகிலன் பானையை வனைந்தான்



யாழினி மேடையில் பாடினாள்



குழந்தைகள் உணவை உண்டனர்



ஆசிரியர் பாடம் நடத்துகிறார்



பூனை பால் குடிக்கிறது



புவியரசன் எழுந்ததும் கடிகாரம் பார்ப்பான்



கபிலன் தினமும் உடற்பயிற்சி செய்வான்

## 26.8 திரும்பப் படிப்போம்

சசி போட்டியில் வென்றாள்

அகிலன் பானையை வனைந்தான்

யாழினி மேடையில் பாடினாள்

குழந்தைகள் உணவை உண்டனர்

ஆசிரியர் பாடம் நடத்துகிறார்

பூனை பால் குடிக்கிறது

புவியரசன் எழுந்ததும் கடிகாரம் பார்ப்பான்

கபிலன் தினமும் உடற்பயிற்சி செய்வான்

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| நடந்தான் | நடக்கிறான் | நடப்பான் |
| படித்தாள் | படிக்கிறாள் | படிப்பாள் |
| தூங்கினான் | தூங்குகிறான் | தூங்குவான் |

## 26.9 சொல்லிப் பழகுவோம்



கவியரசன் பாடங்களைப் படித்தான்



ரோசி வில்வித்தை கற்றாள்



கீர்த்தி பேருந்தில் வருகிறாள்



கவிதா சாலையைக் கடப்பாள்

## பயிற்சிகள்

(அ) தொடருக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.

1. நேற்று வள்ளி பேருந்தில் பள்ளிக்குச் ______________________

(சென்றாள்/செல்வாள்)

2. மாறன் நாளை உடற்பயிற்சி ____________________

(செய்வான்/செய்கிறான்)

3. சிறுவர்கள் தற்பொழுது சுவரில் படம் ______________________

(வரைந்தனர்/வரைகின்றனர்)

4. நாளை நண்பர்கள் அனைவரும் உணவைப் பகிர்ந்து

______________________ (உண்டனர்/உண்பர்)

5. முகிலன் இப்பொழுது வீட்டுப்பாடம் ______________________

(எழுதுகின்றான்/எழுதுவான்)

6. என் பெற்றோர் ஊரிலிருந்தபோது மகிழ்ச்சியாக

______________________ (இருங்கள்/இருந்தனர்)

(ஆ) சரியான காலம் உணர்த்தும் சொல்லை எடுத்து எழுதுவோம்.

1. நான் நேற்று பள்ளிக்குச் சென்றேன்

நான் இன்று பள்ளிக்குச் செல்கிறேன்

நான் நாளை பள்ளிக்குச் செல்வேன்

| | | |
|---|---|---|
| செல்கிறேன் | செல்வேன் | சென்றேன் |

2. அம்மா நேற்று சமையல் ____________________

அம்மா இன்று சமையல் ____________________

அம்மா நாளை சமையல் ____________________

| செய்கிறார் | செய்தார் | செய்வார் |
|---|---|---|

3. தாத்தா நேற்று ஊரிலிருந்து ____________________

தாத்தா இப்போது ஊரிலிருந்து ____________________

தாத்தா நாளை ஊரிலிருந்து ____________________

| வருவார் | வந்தார் | வருகிறார் |
|---|---|---|

4. பாட்டி நேற்று விடுகதை ____________________

பாட்டி இப்போது விடுகதை ____________________

பாட்டி நாளை விடுகதை ____________________

| சொல்கிறார் | சொல்வார் | சொன்னார் |
|---|---|---|

5. அப்பா நேற்று செடியை ____________________

அப்பா இன்று செடியை ____________________

அப்பா நாளை செடியை ____________________

| நட்டார் | நடுவார் | நடுகிறார் |
|---|---|---|

## 26.10 செயல்திட்டம்

முப்பரிமாண வடிவத்தில் தோட்டம் ஒன்றைச் செய்து வருக.

## 26.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. வெங்காயம் | - | Onion |
| 2. முருங்கைக்காய் | - | Drumstick |
| 3. கத்தரிக்காய் | - | Brinjal |
| 4. புடலங்காய் | - | Snake Gourd |
| 5. கோவைக்காய் | - | Ivy Gourd |
| 6. வெண்டைக்காய் | - | Ladies Finger |
| 7. பாகற்காய் | - | Bitter Gourd |
| 8. முள்ளங்கி | - | Raddish |
| 9. கொத்தவரங்காய் | - | Cluster Beans |
| 10. சுரைக்காய் | - | Bottle Gourd |

## பாடம் 27



## 27.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| யானை | சிங்கம் | புலி |
| சிறுத்தை | ஓநாய் | பாம்பு |
| ஒட்டகச்சிவிங்கி | கரடி | கீரி |
| காட்டெருமை | நரி | குரங்கு |

## 27.2 அறிவோம்

### விலங்குகள்

**வீட்டு விலங்குகள்** | **காட்டு விலங்குகள்**



காளைமாடு



சிங்கம்



ஆடு



காட்டெருமை



நாய்



நரி



எருமை



புலி



கழுதை



கரடி



குதிரை



மான்

## 27.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| காளைமாடு | சிங்கம் |
| ஆடு | காட்டெருமை |
| நாய் | நரி |
| எருமை | புலி |
| கழுதை | கரடி |
| குதிரை | மான் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| பசு | பூனை | வரையாடு |
| ஒட்டகம் | பன்றி | முயல் |
| உடும்பு | கங்காரு | அணில் |
| ஓணான் | | |

## 27.4 சொல்லிப் பழகுவோம்



நாய் வீட்டைக் காக்கும்




பசு பால் தரும்



யானைகள் கூடி வாழும்



மான் துள்ளி ஓடும்

## பயிற்சிகள்

(அ) எழுத்துகளை முறைப்படுத்தி எழுதுவோம்.



ணி ல் அ ____ ____ ____



லை மு த ____ ____ ____



டு பு உ ம் ____ ____ ____ ____



ரை தி கு ____ ____ ____



ரு மை எ ____ ____ ____

(ஆ) சொல் கோபுரத்தை விலங்குகளின் பெயர்களால் நிறைவு செய்வோம்.



ஒட்டகம் | வரிக்குதிரை | ஆடு | முள்ளம்பன்றி | முயல் | சிறுத்தை

## 27.5 பாடி மகிழ்வோம்

### முரசு

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டிலே வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக்கொரு நிறமாகும்;
சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்
சாந்து நிறமொரு குட்டி;
பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி;
எந்த நிறமிருந்தாலும் - அவை
யாவும் ஒரே தரமன்றோ?

- பாரதியார்



## 27.6 கேட்டல் கருத்தறிதல்

### வரையாடு (மலை ஆடு)



தமிழ்நாட்டின் மாநில விலங்கு வரையாடு. இது மலைப் பகுதிகளில் வாழும். வரையாடுகள் தமிழ்நாடு மற்றும் கேரளாவில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆடுகள் இனத்திலேயே வரையாடுகள் மிகவும் பெரிய உடலமைப்பைக் கொண்டவை. வரையாடுகளின் உணவு புல். இவை காலை அல்லது மாலை நேரங்களில் மட்டும் கூட்டமாக மேயும். பகல் நேரங்களில் பாறை இடுக்குகளில் ஓய்வு எடுக்கும். வரையாடுகள் தம்மை வேட்டையாட வரும் விலங்குகளைத் தொலைவில் இருக்கும்போதே தம் கூரிய பார்வையால் கண்டறியும் தன்மை உடையன. இவை ஆபத்துக் காலத்தில் உரக்க ஒலி எழுப்பித் தம் இனத்திற்கு எச்சரிக்கை செய்யும்.

## 27.7 அறிவோம்

### எதிர்ச்சொற்கள்



ஆற்றுநீர் பள்ளம் நோக்கிப் பாய்ந்தது.



கவின் செல்லும் வழியில் மேடு இருந்தது.



பறவை மேலே பறந்தது.



பழம் கீழே விழுந்தது.



கூட்டின் உள்ளே குருவி நுழைந்தது.



பாம்பு புற்றிலிருந்து வெளியே வந்தது.



குமரன் மரத்தில் ஏறி நின்றான்.



முத்து ஆற்றில் இறங்கி நின்றான்




என் பள்ளிக்கு அருகில் பூங்கா உள்ளது.



என் வீடு தொலைவில் உள்ளது.



பிறருக்கு உதவுவது இன்பம் தரும்.



தீய செயல்கள் துன்பம் தரும்.

## 27.8 திரும்பப் படிப்போம்

ஆற்றுநீர் பள்ளம் நோக்கிப் பாய்ந்தது.

கவின் செல்லும் வழியில் மேடு இருந்தது.

பறவை மேலே பறந்தது.

பழம் கீழே விழுந்தது.

கூட்டின் உள்ளே குருவி நுழைந்தது.

பாம்பு புற்றிலிருந்து வெளியே வந்தது.

குமரன் மரத்தில் ஏறி நின்றான்.

முத்து ஆற்றில் இறங்கி மீன் பிடித்தான்.

என் பள்ளிக்கு அருகில் பூங்கா உள்ளது.

என் வீடு தொலைவில் உள்ளது.

பிறருக்கு உதவுவது இன்பம் தரும்.

தீய செயல்கள் துன்பம் தரும்.

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| பெரியது | X | சிறிய |
| புதிய | X | பழைய |
| நேர் | X | எதிர் |
| ஏற்றம் | X | இறக்கம் |
| குட்டை | X | நெட்டை |

## 27.9 சொல்லிப் பழகுவோம்



நெட்டை மரம் அருகே குட்டை மரம் இருந்தது



மனித வாழ்க்கை இன்பம் துன்பம் நிறைந்தது



பெரிய குரங்கு கையில் சிறிய பழம் இருந்தது



மிதி வண்டி மேடு பள்ளம் ஏறிச் சென்றது

## பயிற்சிகள்

(அ) எதிர்ச்சொற்களை எழுதுவோம்.

1. மேலே X ____________

2. மேடு X ____________

3. வெளியே X ____________

4. ஏறி X ____________

5. இன்பம் X ____________

6. தொலைவில் X ____________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறங்கி | கீழே | அருகில் | பள்ளம் | உள்ளே | துன்பம் |

(ஆ) எடுத்து எழுதுவோம்.

1. ஏணியின் மேலேயிருந்து கீழே இறங்கினான்.

2. ____________ தோல்வியும் வீரனுக்கு அழகு.

3. கந்தன் இரவு ____________ பாராமல் உழைத்தான்.

4. இன்பம் ____________ கலந்ததுதான் வாழ்க்கை.

5. ____________ துளி பெரு வெள்ளம்.

6. மேடு ____________ நிறைந்தது மலைப்பாதை.

7. சூரியன் காலையில் ____________ மாலையில் மறையும்.

8. சிங்கம் குகையின் உள்ளே இருந்து ____________ வந்தது.

9. குழந்தை விழுந்து ____________ நடந்தது.

10. யானை வரும் ____________ மணியோசை வரும் முன்னே.

| | | | | |
|---|---|---|---|---|
| எழுந்து | சிறு | கீழே | பகல் | பின்னே |
| பள்ளம் | வெற்றியும் | வெளியே | துன்பம் | தோன்றும் |

## 27.10 செயல்திட்டம்

உங்கள் நாட்டின் தேசிய விலங்கு பற்றிய செய்திகளைத் திரட்டித் தொகுப்பேடு தயாரிக்க.

## 27.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. சிறுத்தை | - | Leopard |
| 2. ஒட்டகச்சிவிங்கி | - | Giraffe |
| 3. ஓநாய் | - | Wolf |
| 4. கீரி | - | Mongoose |
| 5. காளை மாடு | - | Bull |
| 6. எருமை | - | Buffalo |
| 7. கழுதை | - | Donkey |
| 8. நீர் யானை | - | Hippopotamus |
| 9. உடும்பு | - | Monitor lizard |
| 10. காண்டாமிருகம் | - | Rhinoceros |



# பாடம் 28

## 28.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| பஞ்சுமிட்டாய் | பட்டங்கள் | படகு |
| தள்ளுவண்டி | பலூன்கள் | பொம்மைகள் |
| கடற்கரை | கப்பல்கள் | |

## 28.2 அறிவோம்

### நிறங்கள்

| | |
|---|---|
| ஊதா | Purple |
| கருநீலம் | Dark blue |
| நீலம் | Blue |
| பச்சை | Green |
| இளம்பச்சை | Young green |
| மஞ்சள் | Yellow |
| சிவப்பு | Red |
| வெள்ளை | White |
| சாம்பல் | Gray |
| கறுப்பு | Black |

## 28.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| ஊதா | கருநீலம் |
| நீலம் | பச்சை |
| மஞ்சள் | சிவப்பு |
| வெள்ளை | இளம்பச்சை |
| சாம்பல் | கறுப்பு |

## 28.4 சொல்லிப் பழகுவோம்



எலுமிச்சை மஞ்சள் நிறம்



மாங்காய் பச்சை நிறம்

## பயிற்சிகள்

(அ) நிறங்களின் பெயர்களை எடுத்து எழுதுவோம்.



1. ______________________________



2. ______________________________



3. ______________________________



4. ______________________________



5. ______________________________

| | |
|---|---|
| மஞ்சள் | நீலம் |
| சிவப்பு | பச்சை |
| கறுப்பு | |

(ஆ) ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட நிறங்களின் பெயர்களைத் தமிழில் கொடுக்கப்பட்ட பெயர்களோடு இணைப்போம்.

| | |
|---|---|
| Violet | வெள்ளை |
| Orange | இளஞ்சிவப்பு |
| White | ஊதா |
| Light Green | சாம்பல் |
| Gray | இளமஞ்சள் |
| Pink | இளம்பச்சை |

## 28.5 பாடி மகிழ்வோம்

### வீடு எங்கே?





வண்ணக் கிளியே, வீடெங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.

தூக்கணாங் குருவி, வீடெங்கே?
தொங்குது மரத்தில் என்வீடு.



கறுப்புக் காகமே, வீடெங்கே?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.

பொல்லாப் பாம்பே, வீடெங்கே?
புற்றும் புதருமே என்வீடு.



கடுகடு சிங்கமே, வீடெங்கே?
காட்டுக் குகையே என்வீடு.

நகரும் நத்தையே, வீடெங்கே?
நகருதே என்னுடன் என்வீடு

- அழ.வள்ளியப்பா





## 28.6 கேட்டல் கருத்தறிதல்

**என்ன வண்ணம் தீட்டலாம்?**



| | | |
|---|---|---|
| அப்பா | : | டேவிட், நாம் நம் புதிய வீட்டிற்குச் சென்று வருவோமா? |
| டேவிட் | : | சரி அப்பா! செல்வோம். |
| அப்பா | : | வீடு அழகாகக் கட்டி இருக்கிறார்கள். |
| டேவிட் | : | ஆமாம் அப்பா. வீட்டிற்கு வண்ணம் தீட்டினால் இன்னும் அழகாக இருக்கும். |
| அப்பா | : | ஜன்னல்களுக்கு என்ன வண்ணம் தீட்டலாம்? |
| டேவிட் | : | சாம்பல் வண்ணம். |

அப்பா : நானும் அதைத்தான் நினைத்தேன். கதவுகளுக்குக் கருநீலம் கொடுக்கலாமா?

டேவிட் : மிகப் பொருத்தமான வண்ணம் அப்பா! சுவர்களுக்குச் வெள்ளை வண்ணம் தீட்டினால் பொருத்தமாக இருக்கும்.

அப்பா : அப்படியே ஆகட்டும் டேவிட். தூண்களுக்குக்கூட மஞ்சள் நிறம் கொடுக்கலாம்.

டேவிட் : அப்படியென்றால் உட்புறச் சுவர்களுக்கு இளம்பச்சை வண்ணம் கொடுக்கலாம்.

அப்பா : அருமை. சமையல் அறைக்கு இளஞ்சிவப்பு நன்றாக இருக்குமா?

டேவிட் : வேண்டாம் அப்பா. சிவப்பு நன்றாக இருக்கும்.

அப்பா : நல்லது டேவிட். நாளை வண்ணம் அடிப்பவரை வரவழைத்துப் பேசிவிடலாம்.

## 28.7 செயல்திட்டம்

வரைபடத்தாளில் வானவில் வரைந்து நிறங்களின் பெயர்களைத் தமிழில் எழுதி வருக.

## 28.8 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. ஊதா | - | Violet |
| 2. கருநீலம் | - | Indigo |
| 3. நீலம் | - | Blue |
| 4. பச்சை | - | Green |
| 5. மஞ்சள் | - | Yellow |
| 6. சிவப்பு | - | Red |
| 7. வெள்ளை | - | White |
| 8. இளம்பச்சை | - | Light green |
| 9. சாம்பல் | - | Gray |
| 10. கறுப்பு | - | Black |
| 11. இளஞ்சிவப்பு | - | Pink |

## பயிற்சிகள்

1. கீழே கொடுக்கப்பட்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றனைப் பற்றி இரு தொடர் கூறுக.

- வாழை
- பலா
- யானை
- புலி
- கேரட்

2. உங்களுக்குப் பிடித்த பழங்களுள் எவையேனும் ஐந்தினைக் கூறுக.

3. நீங்கள் பூங்காவில் பார்த்த பூக்களின் பெயர்களைக் கூறுக.

4. கீழ்க்காணும் உரைப்பகுதியை நன்கு படித்தபின், பயிற்சியைச் செய்க.



பாபுவின் பள்ளியில் இன்று ஆண்டுவிழா. அவன் பேச்சுப்போட்டியில் கலந்து கொள்ள இருப்பதால் பள்ளிக்கு விரைவாகவே கிளம்பினான். "நன்றாகப் பேசவேண்டும்" என்று அப்பா அறிவுரை கூறினார். "நன்றாகப் பேசுவேன், வெற்றியும் பெறுவேன்" என்றான் பாபு.

அதன்பின், பள்ளிக்குப் புறப்பட்டான். அங்கு நடைபெற்ற பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு சிறப்பாகப் பேசினான். முதல் பரிசும் பெற்றான். தன் பெற்றோரிடம் பரிசைக் காண்பித்து வாழ்த்து பெற்றான்.

நிகழ்வை வரிசைப்படுத்திக் கூறுக.

1. பாபு பள்ளிக்குப் புறப்பட்டான்.

2. பாபுவின் பள்ளியில் இன்று ஆண்டு விழா.

3. தன் பெற்றோரிடம் பரிசைக் காண்பித்து வாழ்த்து பெற்றான்.

4. "நன்றாகப் பேசவேண்டும்" என்று அப்பா அறிவுரை கூறினார்.

5. அவன் பேச்சுப்போட்டியில் கலந்துகொள்ள இருப்பதால் பள்ளிக்கு விரைவாகவே கிளம்பினான்.

6. பாபு முதல் பரிசு பெற்றான்.

5. படங்களுக்கான பெயர்களை எழுதுக.





1. ____________________ 2. ____________________





3. ____________________ 4. ____________________





5. ______________________________

6. ______________________________





7. ______________________________

8. ______________________________





9. ______________________________

10. ______________________________

6. படத்தைப் பார்த்து விடுபட்ட சொற்களை எழுதுக.



கதிரவன், ________________, பரிதி



யானை, ________________, ________________



________________, ________________, கிள்ளை

7. கீழ்க்காணும் வடிவங்களில் பிடித்த நிறங்களைத் தீட்டி, அவற்றின் பெயரைத் தமிழில் எழுதுவோம்.



1. சிவப்பு



4. ________________



2. ________________



5. ________________



3. ________________

## 8. பொருத்தமான வினைச்சொல்லை எழுதுக.

1. மஞ்சு நன்றாகப் ________________
2. தாத்தா நாளை ________________
3. தம்பி நேற்று ____________________

பாடுகிறான் | பாடுகிறாள்
வந்தார் | வருவார்
விளையாடினான்
விளையாடுவான்

## 9. விடுபட்ட எழுத்தை எழுதுக.

1. முட் _____ க் _____ சு
2. _____ ங்கா _____
3. மு_____ளங்_____
4. அ _____ ரைக் _____ ய்
5. தக்_____ ளி

## 10. பொருத்தமான சொல்லை எழுதுக.

1. இரவில் ______________ தோன்றும்
2. திருக்குறள் ஒரு ______________
3. மது ______________ நுட்பம் உடையவள்
4. ஆடையைத் தைப்பது ______________

நூல் | மதி

## 11. சொற்களுக்கான ஆங்கிலப் பெயரை எழுதுக.

1. அத்திப்பழம் -
2. பாகற்காய் -
3. அனிச்சம் -
4. உடும்பு -
5. கருநீலம் -

## 12. எதிர்ச்சொற்களை எழுதுக.

1. மேடு X
2. வெளியே X
3. ஏறு X
4. புதிய X
5. குட்டை X

## 13. பொருத்தமான சொல்லை வட்டமிடுவோம்.

1. குழந்தையைக் குறிக்கும் சொல்

தையல் மங்கை மழலை

2. ஒலியைக் குறிக்கும் சொல்

ஓசை கோ குழவி

3. அரசனைக் குறிக்கும் சொல்

மதி பெண் மன்னன்

14. உடல் உறுப்புகளின் பெயர்களை எழுதுக.



15. வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் அட்டவணைப்படுத்துக.

| வீட்டு விலங்குகள் | காட்டு விலங்குகள் |
| --- | --- |
| | |



பாடம் 29

## 29.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| மரங்கொத்தி | மைனா | கொக்கு |
| காகம் | வாத்து | நாரை |
| பஞ்சவண்ணக் கிளி | ஃபிளமிங்கோ | குளம் |

## 29.2 அறிவோம்

பறவைகள்



மயில்



கொக்கு



புறா



கிளி



ஆந்தை



சிட்டுக்குருவி



காகம்



குயில்



கழுகு



தூக்கணாங்குருவி



வாத்து



மைனா

## 29.3 திரும்பப் படிப்போம்

| | | |
|---|---|---|
| மயில் | கொக்கு | புறா |
| கிளி | ஆந்தை | சிட்டுக்குருவி |
| காகம் | குயில் | கழுகு |
| வாத்து | மைனா | தூக்கணாங்குருவி |

**புதிய சொற்கள்**

| | | | |
|---|---|---|---|
| பருந்து | தேன்சிட்டு | காடை | மீன்கொத்தி |
| கௌதாரி | கோழி | அன்னம் | |

## 29.4 சொல்லிப் பழகுவோம்



மயில் அழகாக ஆடும்



குயில் இனிமையாகப் பாடும்



ஆந்தை இரவில் விழித்திருக்கும்



வாத்து நீரில் நீந்தும்

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்.



காகம்



மயில்



ஆந்தை



கிளி



புறா

(ஆ) கட்டத்திலுள்ள பறவைகளின் பெயர்களை வட்டமிடுவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம | சி | கா | ஆ | தி |
| ர | ட் | க | ந் | த் |
| ங் | டு | ம் | தை | கொ |
| கொ | க் | கு | ரு | ங் |
| த் | கு | யி | ம | ர |
| தி | ரு | ல் | யி | ம |
| கி | வி | கு | ல் | மை |
| ளி | க | ழு | கு | னா |

| | | | | |
|---|---|---|---|---|
| கிளி | மைனா | சிட்டுக்குருவி | குயில் | கழுகு |
| மயில் | கொக்கு | மரங்கொத்தி | காகம் | ஆந்தை |

## 29.5 பாடி மகிழ்வோம்

### ஓடி வா!



காக்கா! காக்கா! ஓடிவா!

கத்திக் கத்தி நடந்துவா!

ஆக்கிய சோறு தின்னலாம்:

அதன்பின் பறந்து போகலாம்!



குருவி! குருவி! ஓடிவா!

கூண்டை விட்டே இறங்கிவா!

குருவி! குருவி! ஓடிவா!

நெல்லைக் கொத்தித் தின்னவா!

மயிலே! மயிலே! இறங்கிவா!

தோகை விரித்து ஆடிவா!

குயிலே! குயிலே! ஓடிவா!

குழந்தை சிரிக்கப் பாடிவா!

- வாணிதாசன்





## 29.6 கேட்டல் கருத்தறிதல்

### கழுகு



| | | |
|---|---|---|
| மகள் | : | அப்பா! வானத்தைப் பாருங்கள் மிக உயரத்தில் ஒரு பறவை! |
| தந்தை | : | ஓ! அந்தப் பறவையா? |
| மகள் | : | ஆமாம், அப்பா. அதன் பெயர் என்ன? |
| தந்தை | : | கழுகு. அது கொன்றுண்ணிப் பறவை. |
| மகள் | : | கொன்றுண்ணியா? |
| தந்தை | : | ஆம் மகளே! எலி, கோழிக்குஞ்சு போன்றவற்றைக் கொன்று உண்ணும். |
| மகள் | : | இந்தப் பறவை எங்கே வாழும்? |
| தந்தை | : | உயரமான மரங்கள், மலைச்சரிவுகளில் கூடு கட்டி வாழும். |
| மகள் | : | சரி அப்பா! இப்போது ஏன் இங்குச் சுற்றுகிறது? |
| அப்பா | : | அது, தனக்கான இரையைத் தேடுகிறது. |
| மகள் | : | ஓ, அப்படியா! வானில் மிக உயரத்தில் இருக்கும் போது அதற்குக் கண் தெரியுமா? |
| அப்பா | : | ஆமாம். நன்றாகத் தெரியும். கழுகின் கண்பார்வை மிகக் கூர்மையானது. |

## 29.7 அறிவோம்

### வேற்றுமை உருபுகள்

வேற்றுமை உருபுகளுள் ஐ, ஆல், கு ஆகியவற்றை முதல் பருவத்தில் அறிந்துகொண்டோம். அவற்றுடன் இன், அது, கண் ஆகியவற்றையும் அறிந்து கொள்வோம்.



கண்ணன் **திருக்குறளைப்** படித்தான்



**கத்தியால்** காய்களை நறுக்கினான்



**செங்கல்லால்** வீடு கட்டலாம்



**பூனைக்குப்** பயந்து எலி ஓடியது



கொக்கின் நிறம் வெள்ளை



மலையின் வீழருவி




செல்வத்தில் சிறந்தது கல்வி



வேலனது புத்தகம்



இது நண்பனது வீடு



பறவையது கூட்டம்



யானையினது தந்தம்



மணியின்கண் ஒலி



கையின்கண் விரல்



மரத்தின்கண் மயில்

## 29.8 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| பாலின் நிறம் கொக்கு | மலையின் வீழருவி |
| செல்வத்தில் சிறந்தது கல்வி | வேலனது புத்தகம் |
| இது நண்பனது வீடு | பறவையது கூட்டம் |
| யானையினது தந்தம் | மணியின்கண் ஒலி |
| கையின்கண் விரல் | மரத்தின்கண் மயில் |

## 29.9 சொல்லிப் பழகுவோம்



கல்வியில் பெரியவர் கம்பர்



மயிலினது தோகை



நடனத்தின்கண் அபிநயம்



புற்றின்கண் பாம்பு

## பயிற்சிகள்

**(அ) பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புவோம்.**



புலி ___மானைத்___ துரத்தியது.



கவிதா ________________ சட்டையைத் தைத்தாள்.



________________ மை அழகு.



________________ கிளை.



________________ நிலா.

| | | | | |
|---|---|---|---|---|
| மரத்தினது | கண்ணுக்கு | வான்கண் | ஊசியால் | மானைத் |

**(ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புவோம்.**

1. கரடியைக் ______________ (காட்டின்கண் / காட்டுக்கு) கண்டான்.

2. அவனிடம் இருப்பது ______________ (என்னால் / எனது) குடை.

3. மருதன் ______________ (வயலால் / வயலை) உழுதான்.

4. சிற்பி ______________ (உளியால் / உளிக்கு) சிலையைச் செதுக்கினார்.

5. வீரர்கள் ______________ (போரைச் / போருக்குச்) சென்றனர்.

**(இ) பின்வரும் தொடர்களில் 'அது' வேற்றுமை உருபு அமைந்த தொடருக்குக் (✓) குறியிடுக.**

1. கண்ணன் பாடத்தைப் படித்தான் ☐

2. எனது வீட்டின் அருகே பள்ளி உள்ளது ☐

3. என் நண்பனது புத்தகத்தைக் காணவில்லை ☐

4. தந்தத்தால் செய்த பெட்டியை அப்பா வாங்கினார் ☐

5. குரங்கு, தனது வாலை மரக்கிளையில் சுற்றிக் கொண்டது ☐

## 29.10 செயல்திட்டம்

உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு பறவைகளின் மாதிரி உருவத்தைச் செய்து வருக.






## 29.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. ஆந்தை | - | Owl |
| 2. மயில் | - | Peacock |
| 3. தூக்கணாங்குருவி | - | Weaver bird |
| 4. காகம் | - | Crow |
| 5. அன்னம் | - | Swan |
| 6. வாத்து | - | Duck |
| 7. கழுகு | - | Eagle |
| 8. சிட்டுக்குருவி | - | Sparrow |
| 9. பருந்து | - | Hawk |
| 10. மரங்கொத்தி | - | Woodpecker |
| 11. மைனா | - | Myna |
| 12. கொக்கு | - | Crane |
| 13. கிளி | - | Parrot |
| 14. குயில் | - | Cuckoo |


பாடம்
30

## 30.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| மாமரம் | பப்பாளி மரம் | தென்னை மரம் |
| தேக்கு மரம் | பாகற்காய்க் கொடி | சுரைக்காய்க் கொடி |
| பூச்செடிகள் | மல்லிகைச் செடி | |

## 30.2 அறிவோம்

### தாவரங்கள்



வேப்பமரம்



பூவரசமரம்



அரசமரம்



ஆலமரம்



கருவேலமரம்



தென்னை மரம்



ஆடுதொடாச்செடி



கற்பூரவள்ளிச்செடி



கீழாநெல்லிச்செடி



வல்லாரைச்செடி



ஆவாரம் செடி



எருக்கம் செடி



தூதுவளைக்கொடி



பிரண்டைக்கொடி



முடக்கறுத்தான்கொடி



வெற்றிலைக்கொடி



மிளகுக்கொடி



மொசு மொசுக்கைக்கொடி

## 30.3 திரும்பப் படிப்போம்

| | |
|---|---|
| வேப்பமரம் | பூவரசமரம் |
| அரசமரம் | ஆலமரம் |
| கருவேலமரம் | தென்னைமரம் |
| ஆடுதொடாச்செடி | கற்பூரவள்ளிச்செடி |
| கீழாநெல்லிச்செடி | வல்லாரைச்செடி |
| ஆவராம் செடி | எருக்கம் செடி |
| தூதுவளைக்கொடி | பிரண்டைக்கொடி |
| முடக்கறுத்தான்கொடி | வெற்றிலைக்கொடி |
| மிளகுக்கொடி | மொசு மொசுக்கைக்கொடி |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| புளியமரம் | நாவல்மரம் | பாக்குமரம் |
| பலாமரம் | மருதாணிமரம் | பனைமரம் |
| கற்றாழை | கண்டங்கத்தரி | புதினா |
| சீந்தில்கொடி | மணித்தக்காளி | |

## 30.4 சொல்லிப்பழகுவோம்



வேப்பமரக் காற்று
குளிர்ச்சி தரும்



பனைமரம் நிலத்தடி
நீரைச் சேமிக்கும்



வல்லாரை நினைவாற்றலைப்
பெருக்கும்



தூதுவளை சளி
இருமலைப் போக்கும்

## பயிற்சிகள்

(அ) விடுபட்ட எழுத்துகளை எழுதுவோம்.



ஆ _____ ம _____ ம்



பி ர _____ டை



க ரு _____ _____ ம்



தூ து _____ ளை



ஆ _____ ர ம்

(ஆ) கொடுக்கப்பட்ட சொற்களைக் கட்டத்தில் கண்டறிந்து வட்டமிடுவோம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| க | அ | ர | ச | ம | ர | ம் | ட | மு |
| ற் | ர | ள் | ளி | ட | ம் | ர | ம | ட |
| ளி | ச | வே | ள் | வ | ல் | லா | ரை | க் |
| கா | லா | ப் | வ | ல் | லா | பி | ம் | க |
| க் | த | ப | ர | ம | ண | த் | த | று |
| த | ழா | ம | பூ | கு | ள | மி | கு | த் |
| த் | நெ | ர | ற் | ச | ந் | த | ம | தா |
| ணி | லி | ம் | க | அ | வ | தி | ல | ன் |
| ம | ண் | ற் | க | டை | தொ | டா | ஆ | ர |
| ன் | அ | எ | தெ | சை | லை | றி | ற் | வெ |
| லி | ல் | நெ | ழா | கீ | ஆ | டா | க | ச |

அரசமரம் | முடக்கறுத்தான் | ஆடாதொடை

கற்பூரவள்ளி | கீழாநெல்லி | வல்லாரை

மணித்தக்காளி | வேப்பமரம் | வெற்றிலை

மிளகு

## 30.5 பாடி மகிழ்வோம்

### காடு

முட்புதர் நெருஞ்சி கள்ளி
முன்னரண், ஒற்றைப்பாட்டை
உட்புகும் வாயில், தூண்கள்
உயர்மரம், அம்ம ரத்துக்
கொத்துப்பூ காற்றி லாடும்
கொடிகளாம், வெய்யோன் திங்கள்
உட்புக வொண்ணாத் தூய
மரகதக் கோட்டை காடே!

- வாணிதாசன்

**பொருள் அறிவோம்**

| | | |
|---|---|---|
| ஒற்றைப்பாட்டை | – | ஒற்றைப்பாதை |
| வெய்யோன் | – | சூரியன் |
| திங்கள் | – | நிலா |

## 30.6 கேட்டல் கருத்தறிதல்

### பனைமரம்



தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம். இது புல் இனத்தைச் சேர்ந்த ஒரு தாவர வகை. இதில் ஆண்பனை, பெண்பனை என்ற வகைகள் உண்டு. பனைமரத்திலிருந்து நுங்கு என்னும் உணவுப்பொருள் கிடைக்கிறது. நுங்கு உடலுக்கு ஊட்டச்சத்தைக் கொடுக்கிறது. மேலும், பனை மரத்திலிருந்து பதநீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனங்கிழங்கு, பனம்பழம் போன்ற உணவுப் பொருள்களும் கிடைக்கின்றன. இவை உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன. உடல் வெப்பத்தைப் போக்குகின்றன. இம்மரம் நிலத்தடி நீரைத் தக்க வைத்துக்கொள்கிறது. மேலும், இதன் அனைத்துப் பகுதிகளும் பயன்தருகின்றன.

## 30.7 அறிவோம்

இரண்டு, மூன்று சொல் கொண்ட தொடர்கள்



கொக்கு நின்றது.

கொக்கு **ஆற்றில்** நின்றது.





ஆடு மேய்ந்தது.

ஆடு **வயலில்** மேய்ந்தது.





கிளி பறந்தது.

கிளி **வானில்** பறந்தது.





அமுதன் விளையாடினான்.

அமுதன் பந்து விளையாடினான்.





மரம் அசைந்தது.

மரங்கள் காற்றில் அசைந்தன.





வண்டு அமர்ந்தது.

வண்டு பூவில் அமர்ந்தது.



## 30.8 திரும்பப் படிப்போம்

கொக்கு நின்றது.

கொக்கு ஆற்றில் நின்றது.

ஆடு மேய்ந்தது.

ஆடு வயலில் மேய்ந்தது.

கிளி பறந்தது.

கிளி வானில் பறந்தது.

அமுதன் விளையாடினான்.

அமுதன் பந்து விளையாடினான்.

மரம் அசைந்தது.

மரங்கள் காற்றில் அசைந்தன.

வண்டு அமர்ந்தது.

வண்டு பூவில் அமர்ந்தது.

## 30.9 சொல்லிப் பழகுவோம்



பூவிழி ஏறினாள்



பூவிழி படியில் ஏறினாள்



ரீனா எழுதினாள்



ரீனா தேர்வு எழுதினாள்

## பயிற்சிகள்

(அ) கோடிட்ட இடங்களுக்குரிய சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புவோம்.



கவின் _____________ படித்தான்.



மயில் _____________ விரித்தது.



கொடி _____________ படர்ந்தது



அவன் _____________ பிடித்தான்.



இனியன் ஈட்டி _____________



_____________ கதை சொன்னார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மீன் | தோகை | எறிந்தான் | புத்தகம் | பாட்டி | மரத்தில் |

(ஆ) இரண்டு சொல் கொண்ட தொடர்களை உருவாக்குவோம்.

- சேவல்
- கழுகு
- கோழி
- மரங்கொத்தி
- சிட்டுக்குருவி

பறந்தது

(இ) மூன்று சொல் கொண்ட தொடர்களை உருவாக்குவோம்.

- நான்
- கவின்
- நீ
- அவள்
- அவர்

பள்ளிக்குச்

- சென்றாய்
- சென்றாள்
- சென்றேன்
- சென்றார்
- சென்றான்

## 30.10 செயல்திட்டம்

உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு இதே போன்று ஒரு வண்டி செய்து வருக.



படிநிலை - 1



படிநிலை - 2



படிநிலை - 3



படிநிலை - 4



படிநிலை -5

## 30.11 அறிந்து கொள்வோம்

| | | |
|---|---|---|
| 1. செடி | - | Plant |
| 2. கொடி | - | Creeper |
| 3. மரம் | - | Tree |
| 4. வேப்பமரம் | - | Neem Tree |
| 5. பூவரசமரம் | - | Portia Tree |
| 6. அரசமரம் | - | Pipal Tree |
| 7. ஆலமரம் | - | Banyan Tree |
| 8. கருவேலமரம் | - | Gum Tree |
| 9. ஆடாதொடைச் செடி | - | Malabar nut |
| 10. கற்பூரவள்ளிச் செடி | - | Indian borage |
| 11. கீழாநெல்லிச் செடி | - | Gale of the wind |
| 12. வல்லாரைச்செடி | - | Pennywort |
| 13. ஆவாரம் செடி | - | Matura Tea tree |
| 14. தூதுவளைக்கொடி | - | Pea Egg plant |
| 15. பிரண்டைக்கொடி | - | Veld Grape |
| 16. முடக்கறுத்தான்கொடி | - | Balloon Vine |
| 17. வெற்றிலைக்கொடி | - | Betel |
| 18. மிளகுக்கொடி | - | Black Pepper |


பாடம்
31

## மீள்பார்வை

### பயிற்சிகள்

**1. படங்களைத் தொடர்புபடுத்திக் கதை கூறுக.**



2. கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பற்றி இரண்டு தொடர் கூறுக.














### 3. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கலந்துரையாடுக.

1. திருவிழாக்கள்
2. இயற்கை உணவு
3. மரபு விளையாட்டுகள்
4. மாதங்கள்
5. கிழமைகள்

### 4. பின்வரும் வாழ்வியல் நிகழ்வைக் குறித்துப் பேசுக.

**நீங்கள் சாலையில் நடந்து செல்கிறீர்கள். அங்கே, சாலையோரம் மூதாட்டி ஒருவர் மயங்கிக் கிடப்பதைப் பார்க்கிறீர்கள்? அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்?**

1. நான் உடனே அங்கிருந்து சென்றுவிடுவேன். ஏனெனில்,

________________________

2. நான் ஓடிச் சென்று உதவுவேன். ஏனெனில்,

________________________

5. படங்களைத் தொடர்புபடுத்திக் கதை கூறுக.



6. கீழ்க்காணும் கதையைப் படித்து வினாக்களுக்கு விடை கூறுக.



கடையெழு வள்ளல்களுள் ஒருவர் பேகன். பேகனின் ஊர் மலை சூழ்ந்த ஆவிநன்குடி. இது பொதினி என்றும் பழனி என்றும் அழைக்கப்படும். அவர் ஒருமுறை தேரில் செல்லும்போது, வழியில் மயில் ஒன்று குளிரால் நடுங்கியதைக் கண்டார். அதைக் கண்டு இரக்கப்பட்ட அவர், தான் அணிந்திருந்த போர்வையை அதன்மேல் போர்த்தினார். அன்றுமுதல் மக்கள் இன்றுவரை 'மயிலுக்குப் போர்வை கொடுத்த வள்ளல் பேகன்' என்று வாழ்த்தினர். பேகனைப் போல நாமும் பிறருக்காக வாழ்வோம்.

**வினாக்கள்**

1. வள்ளல் பேகனின் ஊர் எது?
2. ஆவிநன்குடியின் வேறுபெயர் என்ன?
3. பேகன் கண்ட பறவை எது?
4. மயிலுக்குப் போர்வை கொடுத்த வள்ளல் யார்?

## 7. சொற்களைப் படித்துப் பொருளறிந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.

1. வானவில்
2. ஞாயிறு
3. விளையாட்டு
4. உணவு
5. செங்காந்தள்
6. பழங்கள்
7. மூங்கில்
8. தாவரங்கள்
9. விலங்குகள்
10. சிறுத்தை
11. ஆந்தை
12. இரவு
13. வேர்
14. உணவுகள்

## 8. பின்வரும் தொடர்களைப் படித்து அவை உணர்த்தும் காலத்தைக் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்) கூறுக.

1. பூங்கோதை பூஞ்சோலையில் பூவைப் பறித்தாள்.
2. கன்று பசுவிடம் பால் குடிக்கிறது.
3. நான் நண்பர்களுடன் நாளை சுற்றுலா செல்வேன்.
4. சுந்தர் சுவரில் வண்ணம் தீட்டுகிறான்.
5. நீலா நீரோடையில் நீராடினாள்.
6. கதிர் கபடிப் போட்டியில் கலந்துகொண்டு பரிசு வெல்வான்.

9. கொடுக்கப்பட்ட பாடலைக் குரலில் ஏற்ற இறக்கத்துடன் படிப்போம்.

நூலைப்படி – சங்கத்தமிழ்

நூலைப்படி – முறைப்படி

நூலைப்படி

காலையில் படி கடும்பகல் படி

மாலை இரவு பொருள் படும்படி நூலைப்படி!

கற்பவை கற்கும்படி

வள்ளுவர் சொன்னபடி

கற்கத்தான் வேண்டும் அப்படி

கல்லாதவர் வாழ்வதெப்படி? நூலைப்படி!

அறம்படி பொருளைப்படி

அப்படியே இன்பம் படி

இறந்த தமிழ் நான்மறை

பிறந்ததென்று சொல்லும்படி நூலைப்படி!

- பாரதிதாசன்



10. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1. Chess - ______________________
2. Foot ball - ______________________
3. Finger Millet - ______________________
4. Poem - ______________________
5. Rain - ______________________

11. பின்வரும் உரைப்பகுதியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

### நட்பு பாராட்டுதல்

பிசிராந்தையார், பாண்டிய நாட்டைச் சேர்ந்த புலவர். கோப்பெருஞ்சோழன் சோழ நாட்டை ஆட்சி புரிந்த மன்னன். இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்காமலேயே நட்பு கொண்டனர். பிசிராந்தையார், இம்மன்னனைப் போற்றிப் பல பாடல்களைப் பாடியுள்ளார். ஒருசமயம், கோப்பெருஞ்சோழன் உலக வாழ்க்கையைத் துறந்து வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தார். அப்போது அவர், தம் அமைச்சரிடம், "என் நண்பர் பிசிராந்தையார் என்னைக் காண வருவார்" என்று கூறினார். தம் நண்பர் வடக்கிருத்தலை அறிந்த பிசிராந்தையாரும் அவரைக் காண சோழ நாடு வந்தார். மன்னன் உயிர் நீத்த இடத்திலேயே தாமும் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

வடக்கிருத்தல் என்பது வடக்குத் திசை நோக்கி, உண்ணா நோன்பிருந்து உயிர் விடுதல் ஆகும்

1. பிசிராந்தையார் வாழ்ந்த நாடு ________________.

2. பிசிராந்தையாருடன் நட்பு கொண்ட சோழ மன்னன் ________________.

3. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபோது அமைச்சரிடம் ________________ ________________ என்று கூறினார்.

4. வடக்கிருத்தல் என்பது, ________________ ________________ ஆகும்.

5. சோழ மன்னன் வடக்கிருத்தலை அறிந்து அவரைக் காண வந்த புலவர் ________________.

## 12. தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

1. பாடல் - ________________
2. மட்டைப்பந்து - ________________
3. குதிரைவாலி - ________________
4. நண்பன் - ________________
5. வானவில் - ________________

## 13. அண்மையில் நீங்கள் கண்டுவந்த வனவிலங்குகள் காப்பகத்தைப் பற்றிக் கூறுக.

அல்லது

உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நீங்கள் என்னென்ன காய்களைப் பயிரிட விரும்புகிறீர்கள்?

14. எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கி எழுதுக.




1. வாழை.

2. ______________________.

3. ______________________.

4. ______________________.

5. ______________________.

6. ______________________.

7. ______________________.

8. ______________________.

9. ______________________.

10. ______________________.

## 15. பொருத்தமான பால் அறிந்து விடையை எழுதுக.

1. ராமு இராணுவத்தில் பணி ______________________.

2. கயல்விழி கல்லூரியில் ______________________.

3. மரங்கள் காற்றில் ______________________.

4. அதிகாலையில் சேவல் ______________________.

5. மக்கள் வரிசையில் நின்று ______________________.

| | | |
|---|---|---|
| கூவியது | புரிகிறான் | வாக்களித்தனர் |
| படிக்கிறாள் | அசைந்தன | |

## 16. பின்வரும் உரைப்பகுதியில் வேற்றுமை உருபுகளைக் கண்டறிந்து எழுதுக.

முகில் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவனது வீட்டின் வடக்குப் பகுதியில் பள்ளி இருந்தது. அவன் நாள்தோறும் வீட்டின்கண் தோட்டத்திலுள்ள மலர்ச் செடிகளைக் காணச் செல்வான். அங்கு விளையாடியும் மகிழ்வான். ஒருநாள் விளையாடிவிட்டு வீட்டிற்குவந்த முகில், தன் உடையின்கண் ஏதோ ஓடுவதைப் போல் உணர்ந்தான். உடனே தன் அம்மாவை அழைத்தான். அங்கு விரைந்து வந்த அம்மா, அவனது சட்டையைக் கழற்றி உதறினார். அப்போது, தேள் ஒன்று வாசலில் ஓடி மறைந்தது. பதறிய அம்மா, அவனது உடலில் தேள் கடித்த அடையாளம் உள்ளதா எனப் பார்த்தார். நல்லவேளை அப்படி எதுவும் இல்லை. முகிலும் தனக்கு எங்கும் வலிக்கவில்லை என்றான். அவனது தலையைத் தடவிய அம்மா, இனி விளையாடும்போது செடி கொடியின் மீது கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

17. கொடுக்கப்பட்டுள்ள படங்கள் உங்களுக்கு எவற்றை நினைவுபடுத்துகின்றன? ஒவ்வொன்று பற்றியும் இரண்டு தொடர் கூறுக.














## 18. கலைந்துள்ள சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான தொடராக எழுதுக.

1. இறுதிநாள் சனிக்கிழமை வாரத்தின்.

_______________________________________.

2. அடுத்த ஐப்பசி மாதம் புரட்டாசிக்கு.

_______________________________________.

3. தமிழ்நாட்டின் கபடி மாநில விளையாட்டு.

_______________________________________.

4. மகிழ்ச்சி விளையாட்டுகள் தரும் மனத்திற்கு.

_______________________________________.

5. ஞாயிற்றுக்கிழமை முதல்நாள் வாரத்தின்.

_______________________________________.

## அடிப்படை மொழித்திறன்கள்

| | |
|---|---|
| பேசுவோம் | - சூழலைப் புரிந்துகொண்டு இயல்பாகப் பேசும் திறன். |
| அறிவோம் | - படங்கள் வாயிலாக எழுத்து, சொல் அறியும் திறன். |
| திரும்பப் படிப்போம் | - கற்றுக்கொண்ட பாடப்பொருளை மீட்டுணரும் திறன். |
| புதிய சொற்கள் | - புதிய சொற்களைப் பொருளுணர்ந்து கையாளும் திறன். |
| சொல்லிப் பழகுவோம் | - அறிந்த சொற்களைக் கொண்டு தொடர் உருவாக்கும் திறன். |
| பாடி மகிழ்வோம் | - எளிய, இனிய பாடல்களைக் கேட்டுணரும் திறன். |
| கேட்டல் கருத்தறிதல் | - நற்பண்புகளை வளர்க்கும் நிகழ்வுகளைக் கேட்டுணரும் திறன். |
| பயிற்சிகள் | - ஆர்வத்தைத் தூண்டும் செயல்பாடுகளைத் தானே செய்யும் திறன். |
| செயல்திட்டம் | - பாடங்கள் குறித்த தொடர்செயல்களை உருவாக்கும் திறன். |
| அறிந்துகொள்வோம் | - பாடத்திலுள்ள தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை அறியும் திறன். |

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| படங்கள், ஓவியங்கள், கதைப்படங்களை உற்றுநோக்கிச் சொல்லப்படும் சொற்களைக் கேட்டல். | படக்கதைகளைப் பார்த்து நிகழ்வுகளைக் கூறுதல். | மொழியிலுள்ள அனைத்து எழுத்துகளின் ஒலிவடிவ, வரிவத் தொடர்களை இனங்கண்டு முறையாக உச்சரித்துப் பழகுதல். | படங்களைப் பார்த்துப் பெயர்களை எழுதிப் பழகுதல். |
| புதிய சொற்கள் அமைந்த பாடல்களைக் கவனத்துடன் பொருள் புரிந்து கேட்டறிந்து கொள்ளுதல் | ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுதல். | பாடல்களைச் சந்த ஒலிப்புடன் குரலில் ஏற்றத்தாழ்வுடன் படித்துப் பழகுவர். | சொற்களை ஒலிப்பு முறைக்கேற்ப எழுத முற்படுவார்கள் |
| சிந்தனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கவனத்துடன் கேட்டறிதல். | பாடப்பொருண்மைகளைப் படித்தறிந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு எளிய விடையாக முழுமையான சொற்றொடரில் விடை கூறுதல். | எழுத்துகள், சொற்கள் ஆகியவற்றைப் பொருளுணர்ந்து படித்தல் | சொற்களைக் கோவையாக்கிச் சிறுசிறு தொடர்களை உருவாக்கி எழுதுதல். |
| வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டிற்கான விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டல். | கேட்டறிந்த கதைகள், பாடல்களைத் தம் கற்பனையுடன் இணைத்துப் பேசப் பழகுதல். | எளிமையான சொற்களைச் சொற்றொடராக்கிப் படித்துப் பழகுதல். | எளிய பாடல்கள், கதைகள், உரைநடைப் பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்குச் சொற்களாகவும், சிறுசிறு தொடர்களாகவும் விடை எழுதி பழகுவார்கள். |
| எளிய வாய்மொழி அறிவுரைகளையும், நூல்களின் அறக்கருத்துகளையும் கேட்டுப் புரிந்துகொண்டு அதற்கேற்ப வினையாற்றுவர். | சொற்கள், தொடர்களை முறையாகவும், சரியாகவும் ஒலிப்பர். | பாடப்பொருண்மை பகுதியிலிருக்கும் வினாக்களுக்கு விடையளிக்க முற்படுவர். | எளிய இலக்கணக் கூறுகளைப் பயன்பாட்டு அடிப்படையில் எழுதிப் பார்த்தல். |
| வகுப்பறை மட்டுமின்றிப் பொதுப் பயன்பாட்டிலும் பிறர் பேசுவதைப் பொறுப்புடன் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொண்டு முறையான துலங்களை வெளிப்படுத்துவர். | பாடப்பொருண்மைக்கேற்ப பயன்பாட்டுப் பொருள்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாகப் பேச முற்படுவார்கள். | எளிய இலக்கண கூறுகளின் அமைப்புமுறைகளைப் படித்தறிதல். | எழுதும் திறனை வளர்ப்பதற்காக அவரவர் நடையில் சிறுசிறு தொடர்களை எழுத முற்படுவார்கள். |
| எளிய இலக்கணக் கூறுகளைக் கேட்டறிதல். சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கான சொற்களைப் பொருள் புரிந்து கேட்டல். | எளிய இலக்கணக் கூறுகளின் அமைப்பு முறையுடன் சொற்களைப் பொருளுடன் உச்சரித்துப் பழகுதல். | இரண்டு, மூன்று சொல் கொண்ட தொடர்களைப் பொருளுணர்ந்து படித்துப் பழகுவர். | இரண்டு, மூன்று சொல் கொண்ட தொடர்களை இலக்கண முறைப்படி எழுதுவார்கள் |

## மேலாய்வாளர் குழு

**முனைவர் ச. மாடசாமி,**
பேராசிரியர் (ஓய்வு), சென்னை.

**முனைவர் மு. சுதந்திரமுத்து,**
பேராசிரியர் (ஓய்வு), சென்னை..

**திரு. ச. தமிழ்ச்செல்வன்,**
எழுத்தாளர், சிவகாசி.

**திருமதி. ஆ. சே. பத்மாவதி,**
எழுத்தாளர், சென்னை.

## பாடத்திட்ட வல்லுநர் குழு

**முனைவர் ந. நடராச பிள்ளை,**
மேனாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூரு.

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்,**
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, சென்னை.

**முனைவர் வ. தனலட்சுமி,**
இணைப் பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கியப் புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி - 605014.

**திருமதி பா. மலர்விழி,**
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர் - 602025, திருவள்ளூர் மாவட்டம்.

## பாட ஒருங்கிணைப்பாளர் குழு

**முனைவர் க. ஜானகி,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திரு. ச. சுசீந்திரன்,**
உதவி நிரலர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

## மெய்ப்புத் திருத்துநர்

**திரு. ம. அமல்ராஜ்,**
பட்டதாரி ஆசிரியர், பல்லவபுரம் நகராட்சி மேல்நிலைப் பள்ளி,
ஜமீன் இராயப்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்.

## புத்தக வடிவமைப்பாளர்

**திரு. சி. ரமேஷ்,**
ஸ்பின்டா மீடியா ((மேகு ஸ்டுடியோ), கடை எண்: 92 தரை தளம், ரஹாத் பிளாசா, 172, ஆற்காடு சாலை, வடபழனி, சென்னை-26.

## பாடநூலாசிரியர் குழு

**முனைவர் கோ. நாராயணமூர்த்தி,**
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் மாவட்டம்.

**திரு. வே. நஞ்சகுமார்,**
தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி,
டி. சூளகுண்டா, கிருஷ்ணகிரி மாவட்டம்.

**திருமதி பி. மாங்கனி,**
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அரசு உயர் நிலைப் பள்ளி, நாகமங்கலம், அரியலூர் ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.

**முனைவர் சு. பலராமன்,**
முதுகலைத் தமிழாசிரியர்,
ஜெயின் பப்ளிக் பள்ளி, திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

**திரு. கோ. சிவகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
வடமதுரை, திண்டுக்கல் மாவட்டம்.

**திரு. நா. சக்திவேல்,**
பட்டதாரி ஆசிரியர்,
மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, பாப்பநாயக்கன் பாளையம்,
கோவை மாவட்டம்.

**முனைவர் தெய்வ. சுமதி,**
தலைமை ஆசிரியர்,
ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி, ஆதியூர், திருப்பத்தூர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

**திருமதி ச. பஞ்சவர்ணம்,**
தலைமை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, தாம்பரம், சானிடோரியம்.
செங்கல்பட்டு மாவட்டம்.

**திரு. இரா. பிரபாகரன்,**
முதுகலைத் தமிழாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி,
பொட்டிரெட்டிபட்டி, நாமக்கல் மாவட்டம்.

**திரு. ஏ. சக்திகுமார்,**
முதுகலைத் தமிழாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி, வழுதாவூர்,
விழுப்புரம் மாவட்டம்

**திரு. கு.வ. மகேந்திரன்,**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பெரிய குக்குண்டி, இராணிப்பேட்டை மாவட்டம்.

## தட்டச்சுக் குழு

**திருமதி சோ. ஜோதி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

**திருமதி கோ. கல்விக்கரசி,**
தரவு உள்ளீட்டாளர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை-25.

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை – 600025.

www.tamilvu.org

978-81-977380-5-0